இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 76 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 08 – புதன்கிழமை 25 அக்டோபர் 2023 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 76: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 08 - Wednesday 25 October 2023 - Trichy ★★ 10 Pages ₹5.00

## கழகத் தலைவர் – முதல்வர் வழிகாட்டுதலின்படி, கழக அணிகள் செயல்திட்டத்தை ஏற்படுத்தி

# ‘நீட்’ தேர்வில்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

## கழக அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்ற ‘நீட்’ விலக்கு நம் இலக்கு’ எனும் காணொலிக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

சென்னை, அக்.25–

**‘கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் வழி காட்டுதலின்படி, கழக அணிகள் செயல்திட்டத்தை ஏற்படுத்தி ‘நீட்’ தேர்வில்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்’ என கழக அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்ற ‘நீட்’ விலக்கு நம் இலக்கு’ எனும் காணொலிக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரைத்தார்.**

நீட் தேர்வுக்கு எதிரான, ‘நீட் விலக்கு நம் இலக்கு’என்ற கையெழுத்து இயக்கத்தை மாபெரும்மக்கள்இயக்கமாகமுன்னெடுப்பது தொடர்பாக கழக அணிகளின் செயலாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், இணை, துணைச் செயலாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது :-

“கழகத்தினுடைய அனைத்து அணிகளின் மாநில நிர்வாகிகளையும் சந்திப்பதில் மகிழ்ச்சி. நம் கழகமும், கழக அரசும் மாநில சுயாட்சிக்காகவும், கல்வி உரிமைக்காகவும் தொடர்ந்து போராடி வருகிறது. குறிப்பாக ஏழைஎளிய கிராமப்புற, அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவம், தொழில்நுட்பக் கல்வியில் பின்தங்கிவிடக் கூடாது என்பதற்காக, ‘12ஆம் வகுப்பில் எடுக்கும் மதிப்பெண்களின் அடிப்படையிலே உயர் கல்விச் சேர்க்கை நடைபெறும்’ என்று கூறி நுழைவுத் தேர்வை ஒழித்தவர்தான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### நீட் தேர்விலிருந்து முதலில் விலக்கு பெற்றது கலைஞர் ஆட்சியில்தான்!

ஒன்றிய அரசினால் ‘நீட் தேர்வு’ இந்தியா முழுவதும் திணிக்கப்பட்டபோது, ‘இந்தத் தேர்வு சமூகநீதிக்கு எதிரானது, மருத்துவத்தில் முன்னேறிய மாநிலமான தமிழ்நாட்டு நலனுக்கு எதிரானது’ என்று எடுத்துக் கூறி இந்தத் தேர்வில் இருந்து நாம்தான் தமிழ்நாட்டுக்கு விலக்கு பெற்றோம்.




கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞர் அணி சார்பில் 21.10.2023–ல் நடைபெற்ற நீட் தேர்வு விலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்த காட்சி.

ஆனால் அம்மையார் ஜெயலலிதா அவர்களின் மறைவுக்குப் பிறகு, பாசிச பா.ஜ.க. அரசின் தயவால் இங்கு ஆட்சியைத் தக்க வைத்திருந்த அடிமை அ.தி.மு.க. அரசு, நம் மாணவர்கள் மீது நீட் தேர்வை வலுக்கட்டாயமாகத் திணித்தது. எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அடிமைக் கூட்டம், நம் கல்வி உரிமையை மோடிஅமித்ஷாவிடம் அடகு வைத்து, நீட் தேர்வை தமிழ்நாட்டுக்குள் அனுமதித்தனர்.

‘நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற்றுத் தருவோம் என்று நாம் சொன்னோம். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்’ என்று நாம் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு மக்களைச் சந்திக்கிறோம். ஆனால் நீட் தேர்வு திணிக்கப்பட்டபோது, அப்போதைய அ.தி.மு.க. அரசு என்ன சொன்னது, ‘ஒன்றிய அரசுஉச்சநீதிமன்றம் சொல்லிவிட்டது. இதைத் தவிர, அரசுக்கு வேறு வழி தெரியவில்லை’ என்றது.


### பழனிசாமியின் சுயநலத்தால் தமிழ்நாட்டில் ‘நீட்’ தேர்வு திணிப்பு!

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களே நீட் தேர்வுக்கு எதிரான மனநிலையில், இருக்கிறார்கள் என்பது திரு.எடப்பாடி பழனிச்சாமிக்கே நன்றாகத் தெரியும். ஆனால், தன்னுடைய சுயநலத்துக்காக மக்களின் அந்த எதிர் மனநிலையையும், அவர்களுடைய அரசு இயற்றிய சட்டமன்றத் தீர்மானத்தையும் அவரே நீர்த்துப்போகச் செய்தார். அ.தி.மு.க. என்ற சுயநலக் கட்சியின் மக்கள் விரோத நடவடிக்கையால்தான் தங்கை அனிதாவில் தொடங்கி, குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் வரை இதுவரை நம் வீட்டுப் பிள்ளைகள் 22 பேரை நாம் இந்த நீட் தேர்வுக்குப் பறிகொடுத்திருக்கிறோம். நீட் தேர்வு திணிக்கப்பட்ட நாளில் இருந்தே, நாம் அதற்கு எதிராகப் போராடி வருகிறோம். ஆர்ப்பாட்டம் – போராட்டம் என களத்தில் இறங்கி, போராடியிருக்கிறோம். நாம் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில், அரசு அமைந்தவுடன் நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவதற்கான நடைமுறைகளைத் தொடங்கினோம்.

**நீட் தேர்வுக்கு எதிரான ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மன நிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையிலும், இதில் நாம் கலந்துகொள்ளவில்லை என்றால், நாம் மக்களால் வெறுக்கப்படுவோம் என்று பிற கட்சிகள் அஞ்சும் வகையிலும் இந்தக் கையெழுத்து இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்தக் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.**

### ‘நீட்’ தேர்வு விலக்கின் அவசியத்தை பிரதமரிடம் எடுத்துரைத்தேன்!

அரசு அமைந்து சரியாக ஒரே மாதத்தில், நீட் தேர்வு பற்றி முழுமையாக ஆராய்ந்து, நம் மாணவர்களின் நலன் காப்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட, ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்களின் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை நம் முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்கள்.



`நீட் விலக்கு நம் இலக்கு’ எனும் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கியுள்ள நிலையில், அதற்கு மிகப்பெரிய ஆதரவை தமிழ்நாட்டு மக்களும் மாணவர்களும் அளித்து வருகின்றனர். இந்தக் கையெழுத்து இயக்கத்தை இன்னும் வேகமாகவும் மாபெரும் மக்கள் இயக்கமாகவும் முன்னெடுத்துச் செல்வதற்காக தி.மு. கழகத்தின் அனைத்து அணிகளின் செயலாளர்கள், தலைவர்கள், துணை – இணைச் செயலாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று உரையாற்றினார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கழக அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் அரசுக்கு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், நீட் நுழைவுத் தேர்வு முறையிலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிப்பதற்காக, ‘தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்2021’ என்ற சட்ட முன்வடிவு சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளோம். இந்திய ஒன்றியத்தின் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நான் டெல்லியில் சந்தித்துப் பேசும்போது, நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டிய தன் அவசியம் குறித்துப் பேசினேன்.

கடந்த ஆகஸ்டு 20ஆம் தேதி நாம் அனைவரும் நடத்திய உண்ணாநிலை அறப்போராட்டத்தில்கூட, ‘வாருங்கள் நாம் அனைவரும் போராடுவோம். நீட் தேர்வில் இருந்து விலக்கு கிடைத்தால் அதற்கான கிரெடிட்டை நீங்களேகூட எடுத்துக்கொள்ளுங்கள்’ என்று எடப்பாடிக்கு அழைப்பு விடுத்தேன்.

நீட் விலக்கைவிட அவர்கள் மீதான வழக்குகள்தான் அவர்களை பயமுறுத்துகின்றன. அதனால், அவர்கள் என்றும் நீட் விலக்குக்காக வரவேமாட்டார்கள். அவர்கள் சூழலுக்குத் தகுந்தாற்போல் தங்களை மாற்றுக்கொள்ளும் பச்சோந்திகள். அவர்களை எதிர்பார்த்துப் பயனில்லை.

### வழக்குகளுக்கு பயந்து பச்சோந்தியாக மாறும் பழனிசாமி!

நம் மாணவர்களை, நம் கல்வி உரிமையை நாம்தான் காக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்தக் கையெழுத்து இயக்கத்தை, முதலமைச்சர்கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணிமாணவர் அணிமருத்துவ அணி சார்பில் தொடங்கினோம்.

இதன் தொடக்க நிகழ்ச்சி, தமிழ்நாடு முழுவதும் கழக மாவட்டங்கள் வாரியாக நேற்று முன்தினம் மிகப்பெரிய அளவில் நடைபெற்றது. நம் அமைப்புச் செயலாளர் அவர்கள்கூட கடலூர் மேற்கில் தொடங்கிவைத்து, உரையாற்றி இருக்கிறார்கள். அதேபோல் இங்குள்ள அணிகளின் மாநில நிர்வாகிகள் பலர் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று இந்தக் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்து விட்டு வந்திருக்கிறார்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## தமிழ்நாட்டிற்கு ‘நீட்’ தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்!

# சாதிவாரி கணக்கெடுப்பு கண்டிப்பாக தேவை!

## முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கருத்து!

புதுக்கோட்டை, அக்.25-

சாதிவாரி கணக்கெடுப்பு கண்டிப்பாக தேவை என்று ப.சிதம்பரம் கூறினார். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே கொத்தமங்கலத்தில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அளித்த பேட்டி வருமாறு:-

கொரோனா காலத்தில் 2 ஆண்டு காலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்காமல் இருந்தது. இதனால் பல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போனது. சாதிவாரி கணக்கு என்பது கண்டிப்பாக தேவை. இதன் மூலம் அரசு வேலைகளில், பள்ளி கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்யலாம்.

நாடாளுமன்றத்தில் கூட ஒரு எம்.பி. புலிகள், யானைகளை கூட கணக்கீடு செய்யப்படுகிறது என்று வேடிக்கையாக சொன்னார். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வறுமையில் இருக்கிறார்கள் என்பது கணக்கெடுத்தால்தான் தெரியும்.

பத்தாண்டுக்கு ஒரு முறை எடுக்க வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பையே ஒன்றிய அரசு எடுக்கவில்லை. இதை 2021லேயே எடுத்திருக்க வேண்டும். நீட் தேர்வு தேவையில்லை என்பதுதான் எனது கருத்து.

தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க. ஆரம்பகாலத்தில் இருந்து வைக்கும் கோரிக்கை. தமிழ்நாட்டில் ஏறத்தாழ அனைத்துக் கட்சிகளும் ஏ ற் று க் கொ ண் ட கோரிக்கை இது. நீட் தேர்வு இல்லாமல் தான் புகழ்பெற்ற மருத்துவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். தி.மு.க.வினர் கையெழுத்து இயக்கத்தை ஜனநாயக முறைப்படி நடத்துகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

## காத்மாண்டுவில் நில நடுக்கம்!

### 95 வீடுகள் இடிந்தன!

காத்மாண்டு, அக்.25 –

நேபாள் தலைநகர் காத்மாண்டுவில் நேற்று முன்தினம் காலை 7.39 மணியளவில் நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.1 அளவில் பதிவான அந்த நிலநடுக்கம் தாடிங் மாவட்டத்தை மையமாக கொண்டு ஏற்பட்டதாக தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்தது. அதன் அதிர்வுகள் பாகமதி மற்றும் கண்டகி மாவட்டங்களிலும் உணரப்பட்டது. அதன் பின் 3 முறை லேசான அதிர்வுகள் பரவலாக உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால் தாடிங் மாவட்டம் ஜுவாலாமுகி முனிசிபாலிட்டியில் உள்ள 20 வீடுகள் தரைமட்டமானதுடன், 75 வீடுகளின் சுவர்கள் இடிந்துள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். நிலநடுக்க சேதம் பற்றிய தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

---

## ஓமன் - ஏமனுக்கு இடையே கரையைக் கடக்கும்!

# மிகத் தீவிர புயலாக உருவெடுக்கிறது ‘தேஜ்’!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, அக். 25 -

கடந்த 19ம் தேதி காலை தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, அன்றைய நாள் நள்ளிரவிலேயே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக தென்மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் நிலவியது.



இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் புயலாக உருவெடுத்தது. தென்மேற்கு அரபிக் கடலில் உருவாகியுள்ள இந்த புயலுக்கு ‘தேஜ்’ என பெயரிடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், இந்த புயல் தீவிர புயலாக வலுவடைந்ததாக வானிலை ஆய்வுமையம் அறிவித்திருந்தது. மேலும் இந்த புயலானது அதி தீவிர புயலாக மாறி, இன்று (25ம் தேதி) அதிகாலை ஓமன் மற்றும் ஏமன் இடையே கரையைக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்திருந்தது.

இ ந் நி லை யி ல் தென்மேற்கு அரபிக் கடலில், நிலைகொண்டுள்ள இந்த அதிதீவிர ‘தேஜ்’ புயல், நேற்று முன்தினம் மிகத் தீவிரப் புயலாக வலுப் பெற்றது.

இது இன்று அதிகாலை ஓமன் மற்றும் ஏமனுக்கு இடையே கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 25-10-2023

# அரசும் ஆலயங்களும் 2

★ உண்டியலில் சேகரிக்கப்படும் பணம், தனி வங்கிக் கணக்கில் இருக்கும். அந்தந்த மாதம் கோவிலுக்குத் தேவையான செலவுக்கு இந்த தனி வங்கிக் கணக்கில் இருந்து கோவிலுக்கான அன்றாட நடைமுறை வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படும். உண்டியல் பணத்தை கோவில் அதிகாரி நிரந்தர வங்கிக் கணக்கிலேயே வைத்திருப்பார்.

★ வடபழநி ஆண்டவர் திருக்கோவில் உண்டியல் காணிக்கை நிதி தனி வங்கிக் கணக்கில் பல கோடி ரூபாய் இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள சில பெரிய கோவில்களின் வங்கிக் கணக்கில் பல நூறு கோடி ரூபாய் வரை நிரந்தர வைப்பு நிதியாக இருப்பதையும் நானறிவேன். இப்பணத்தை யாரும் எடுக்கவோ, வேறு பயன்பாட்டிற்கு மாற்றவோ முடியாது. அதற்கு வழியுமில்லை.

★ உண்டியலில் சேகரிக்கப்படும் உலோகங்கள் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு, தங்கம் தனியாக கட்டப்பட்டு கோவில் லாக்கரில் பாதுகாக்கப்படுகின்றன. இவையும் மூன்று அதிகாரிகள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு அதற்கான சாவிகள் வெவ்வேறு அலுவலகங்களில் தனித்தனியாக பராமரிக்கப்படுகின்றன. லாக்கரை தனியாகச் சென்று யாரும் திறக்க முடியாது. சாவி பெறுவதற்கே கடும் விதிகளும் நடைமுறைகளும் உள்ளன.

★ ஒரு பக்தர் குறிப்பிட்ட வேண்டுதலுக்காக, அதாவது வேல், கிரீடம் செய்ய தங்கமோ வெள்ளியோ காணிக்கையாக கொடுத்திருந்தால் அவற்றை வேறு காரணங்களுக்காக பயன்படுத்த முடியாது.

★ உண்மை நிலை இவ்வாறு இருக்க … ஒரு சிலர் அவரவர் கற்பனைச் சிந்தனைக்கு ஏற்றாற்போல உண்டியல் காணிக்கைகள் இந்த அமைச்சருக்கு பத்து சதவிகிதம் போகிறது அந்த அமைச்சருக்கு 10 சதவிகிதம் போகிறது எனச் சொல்வது அவர்களின் அறியாமையன்றி வேறில்லை.

★ ஒரு சிலர் சொல்வதைப் போல கோவில் பணம் வேறு எங்கும் போய்விடாது.

இவை அனைத்தும் 'தினமலர்' நிர்வாகி ஆதிமூலத்தின் வாக்குமூலங்கள் தான். உண்டியல் பணம் எவ்வளவு பாதுகாப்பாக கையாளப்படுகிறது என்ற 15 வழிமுறைகளையும் அவர் வரிசைப்படுத்தி இருக்கிறார். இதன்பிறகும் ஒரு கூட்டம், கோவில் நிதிகள் முறையாகப் பயன்படுத்தப்பட வில்லை என்று கூக்குரல் இடுவது அவர்களது சுயநலமே தவிர வேறல்ல.

**“கோவிலை விட்டு அரசே வெளியேறு என்று சொல்லும் மூன்று பேர் கோவில் நிலத்தை ஆக்கிரமித்திருந்தார்கள். அவர்களிடம் இருந்து நிலத்தை மீட்டுள்ளோம்” என்று அறநிலையத் துறை அமைச்சர் சொல்லி இருந்தார். இது தான் இந்த பொய் பிரச்சாரத்துக்கு பின்னால் இருக்கும் உள் நோக்கம் ஆகும்.**

**கோவிலை சுத்தம் செய்வது சிலருக்குப் பிடிக்கவில்லை. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதும், கோவில் ஓதுவார்களாக பெண்கள் வருவதும், தமிழில் வழிபாடு செய்யலாம் என்பதும் சிலருக்கு எரிச்சலாக இருக்கிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதும், கோவில்கள் அனைத்திலும் கேமராக்கள் பொருத்துவதும், அனைத்து ஆவணங்களையும் இணையத்தில் வெளியிடுவதும் சிலரை கோபம் கொள்ள வைக்கிறது. யாரெல்லாம் கோவில் சொத்துகளை ஆக்கிரமித்திருந்தார்கள், யாரிடம் இருந்தெல்லாம் மீட்டுள்ளோம் என்பதை புத்தகமாகப் போட்டு வழங்கி வருகிறார் அமைச்சர் சேகர்பாபு. இது பா.ஜ.க. தலைமை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தான், 'கோவிலைவிட்டு அரசே வெளியேறு' என்று கிளம்புகிறார்கள்.**

கோவிலை விட்டு அரசே வெளியேறு என்பதைப் போல மருத்துவ மனைகளை விட்டு அரசே வெளியேறு கல்லூரிகளை விட்டு அரசே வெளியேறு என்று சிலர் கிளம்பினால் என்ன ஆகும்?

கோவில்களை அரசு தான் நிர்வாகம் செய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்தவர்களும் பக்தர்கள். மதுரையைச் சேர்ந்த தரும இரண்டன சபை அல்லது அறக்கட்டளை பாதுகாப்புச் சங்கம் என்ற அமைப்பு 1907 முதல் வலியுறுத்திவந்த கருத்து இது. பெரும்பாலும் பார்ப்பன வழக்கறிஞர்கள் இருந்த அமைப்பு இது. இந்த கோரிக்கையைத் தான் பழுத்த பக்தரான அன்றைய முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் 1927 ஆம் ஆண்டு நிறைவேற்றினார்கள். இவர் சமஸ்கிருத பண்டிதர். இந்த சட்டமுன் வடிவை உருவாக்கிக் கொடுத்தவர் அன்றைய சட்ட மன்றத்தின் சிறப்பு உறுப்பினராக இருந்த என்.கோபாலசாமி அய்யங்கார் அவர்கள். இவர் பிற்காலத்தில் பிரதமர் நேருவின் அமைச்சரவையில் அமைச்சராக இடம்பெற்றார். நீதிக்கட்சி காலத்தில் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுவுக்குத் தலைவராக இருந்தவர் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக (1912-21) இருந்த சர்.டி.சதாசிவ அய்யர் அவர்கள்.

இந்த சட்டத்தை 1948 ஆம் ஆண்டு செம்மைப்படுத்தியவர் அன்றைய முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி அவர்கள். இவர் ரமண மகரிஷியின் சீடர். ஒருநாளைக்கு ஆறு முறை வழிபாடு செய்பவர். பெருந்தலைவர் காமராசர் ஆட்சியில் தான் இச்சட்டத்தில் இருந்த ஒருசில ஓட்டைகள் கூட அடைக்கப்பட்டன. பழுத்த ஆத்திகரான பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் அறநிலையச் சட்டத்தை கடுமையாகக் கடைப்பிடித்தார். இதன் தொடர்ச்சியாக தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது.

1927 ஆம் ஆண்டு முதல் இருக்கும் நடைமுறை இது. மாண்புமிகு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற பிறகு தான் ஏதோ கோவில்களை அரசு எடுத்துக் கொண்டதைப் போல பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் பேசியது, 'வாட்ஸ் அப்' வதந்தி வரலாறே தவிர உண்மை வரலாறு அல்ல.

**பழுத்த ஆத்திகர் எப்போதும் குங்குமப் பொட்டுடன் காட்டியளித்தவர் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலராக இருந்தவர் மறைந்த மரியாதைக்குரிய பெரியவர் பி.டி.ஆர்.பழனிவேல் ராசன் அவர்களிடம், “இந்து கோவில்கள் மட்டும் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இருப்பது போல், சர்ச்சுகளும் பள்ளிவாசல்களும் ஏன் அரசின் வசம் இல்லை?” என்று கேட்டார்கள்.**

**அவர் சொன்னார்: 'ராஜாங்கங்களும், சமஸ்தானமும் அரசுடமை ஆகியது போல அரசர்கள் கட்டிய கோவில்கள் அரசு வசம் வந்துள்ளது. ஆதீனங்களும், மடங்களும் இன்றும் சுயமாக இயங்குவதைப் போல தனியார்களால் உருவாக்கப்பட்ட சர்ச்சுகளும் பள்ளிவாசல்களும் சுயமாக இயங்குகின்றன' என்றார். இதை விட வேறு தீர்ப்பு இருக்க முடியுமா?**

உண்மையான பக்தர்களின் கோரிக்கையைத்தான் செயல்படுத்தி வருகிறோம். பகல் வேஷக்காரார்கள் அதனால் தான் பயப்படுகிறார்கள்.

●●

சுதந்திரப் போராட்ட வீரர்

# பொல்லானுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம்!

## ஈரோடு ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

ஈரோடு, அக். 25 -

சுதந்திரப் போராட்டவீரர் தீரன் சின்னமலையின் படைத்தளபதி மாவீரன் பொல்லான் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் முழுவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (23.10.2023), சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் படைத்தளபதி மாவீரன் பொல்லான் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் முழுவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைப்பது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மது விலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் சுதந்திர போராட்ட வீரர்களை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில், சுதந்திர போராட்ட வீரர்களின் நினைவைப் போற்றும் வகையில் முழு உருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப் பட்டு வருகின்றன. அந்த வகையில் கொங்கு மண்டலத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து இந்திய சுதந்திர போராட்டத்திற்காக போராடிய மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதியான மாவீரன் பொல்லான் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் முழு உருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தினை விரைவாக அமைக்கப்பட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் நேற்று முன்தினம் (23.10.2023) ஈரோடு மாவட்டத்தில் மாவீரன் பொல்லான் அவர்களுக்கு முழு உருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைப்பதற்கான பல்வேறு அமைப்பினர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மேலும் கடந்த ஆட்சியில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம், நல்ல மங்கா பாளையத்தில் சுமார் 18 சென்ட் நிலப்பரப்பில் மாவீரன் பொல்லான் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைப்படுமென அரசாணை வெளியிட்டார்கள். அந்த இடம் போதுமானதாக இல்லையெனவும் கூடுதலான இடத்தில் நினைவு அரங்கம் அமைக்கப்பட வேண்டுமென வாரிசுதாரர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரத்தில் சுமார் 41 சென்ட் நிலப்பரப்பில் ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் முழுஉருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைப்பதற்கான அரசாணை கடந்த 19.07.2021 அன்று வெளியிடப் பட்டது.

மேலும் அனைத்து வசதிகளுடன் முழு உருவச்சிலையுடன் கூடிய நினைவு அரங்கம் அமைப்பதற்கு மேலும் கூடுதலாக தேவைப்படுகிறது. அதற்கான இடம் தற்போது கண்டறியப் பட்டுள்ளது. உரிய துறையின் மூலம் இடத்திற்கான ஆணைகிடைத்தவுடன் பொதுப்பணித்துறையின் மூலம் திட்டம திப்பீடு உடனடியானதயார் செய்யப் பட்டு,மாவீரன் பொல்லான் அவர்களுக்கு முழு உருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைப்பதற்கான பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைப்பார்கள் என்பதை தெரிவித்துக்கொள்வதோடு,மேலும் பல்வேறு அமைப்பினர்களிடமிருந்து மாவீரன் பொல்லான் அவர்களுக்கு அமைக்கும் சிலையில் குதிரையின் மீதுள்ள சிலை அமைக்கவும், நூலகம், வரலாற்று விபரங்கள் அடங்கிய கல்வெட்டு அமைப்பது உள்ளிட்ட பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்துக்கள் அனைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டுசெல்லப்படும் என தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ச.சந்தோஷினி சந்திரா,பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் காசிலிங்கம், கண்காணிப்பு பொறியாளர் பெரியசாமி, செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் இளஞ்செழியன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு அமைப்பினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில்

# தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலுக்கு வெள்ளிப் பதக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, அக். 25 -

பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார். 'தமிழ்நாட்டுக்கும் இந்தியாவிற்கும் மீண்டும் ஒரு முறை பெருமை பாராட்டுகள்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவில் உள்ள ஹாங்சோ நகரில் நேற்று முன்தினம் முதல் பாரா ஆசிய விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகிறது. இம்மாதம் 28ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவில் இருந்து 303 பேர் (191 வீரர்கள் 112 வீராங்கனைகள்) கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.



பாரா உயரம் தாண்டும் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த மூவர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். இவர் ஏற்கனவே 2016ஆம் ஆண்டு இரியோ - டி - செனீராவில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் உயரம் தாண்டுதல் போட்டியில் பங்கேற்று தங்கப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழாண்டுகளுக்குப் பிறகு தற்போது நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**பாரா ஆசிய விளையாட்டில் உயரம் தாண்டுதல் T63 பிரிவில் வெள்ளி வென்று தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் மீண்டுமொரு முறை பெருமை தேடித்தந்துள்ள நமது மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்!**

**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# பூண்டி நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு விவரம்! மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு!

*சென்னை, அக். 25 -*

*பூண்டி, சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாக உள்ளது. இந்த ஏரிக்கு ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து வரும் கிருஷ்ணா நீர் முக்கிய நீர் ஆதாரமாகும். இங்கு வரும் நீரை அப்படியே இணைப்பு கால்வாய்கள் வழியாக செம்பரம்பாக்கம், செங்குன்றம், சோழவரம் ஆகிய ஏரிகளுக்கு அனுப்பி சேகரிக்கப்படுகிறது.*

*இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பூண்டி நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் நீர் வளத்துறை அதிகாரிகளுடன் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*அப்போது, அங்கு வரைபட உதவியுடன் ஆறுகளின் விவரங்கள், நீர்வரத்து கால்வாய்கள். பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து இணைப்பு கால்வாய்கள் மூலம் அனுப்புதல், நீரின் கொள்ளளவு போன்றவை குறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் விவரமாக எடுத்துரைத்தனர்.*

*இதனைத் தொடர்ந்து நீரின் இருப்பை பார்வையிட்டதோடு, கண்காணிப்பு கேமரா செயல்பாடு குறித்தும் கேட்டறிந்தார்.*

*தொடர்ந்து ஏரியின் மேல் பகுதிகளில் மோட்டார் மூலம் இயங்கும் மதகுகளின் செயல்பாடு. அதன் பராமரிப்பு குறித்த முழு விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். ஏரியின் மொத்தக் கொள்ளளவு 3,231 மில்லியன் கன அடியும். 35 அடி உயரமும் கொண்டதாகும். தற்போதைய நிலையில் 32 அடி உயரமும், 2,241 மில்லியன் கன அடியும் இருப்பு உள்ளது.*

*இதைத்தொடர்ந்து சுற்றுலா தொடர்பான விவரங்களையும், செம்பரம்பாக்கம், செங்குன்றம் ஏரிக்குச் செல்லும் மதகுகள் மற்றும் இணைப்பு கால்வாய்களையும் பார்வையிட்டு அதன் விவரங்களையும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.*

*அப்போது, நீர்வளத்துறை உதவி செயற் பொறியாளர் எம்.பி.சத்யநாராயணன், உதவிபொறியாளர் ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.*



# ‘நீட்’டுக்கு எதிராக அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றிய மசோதா திருப்பி அனுப்பப்பட்டதையே மறைத்துவிட்டு இன்று நம்மை குறைகூறும் பழனிசாமி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி...

நீட் தேர்வுக்கு எதிரான ஒட்டுமொத்த தமிழ் நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையிலும், இதில் நாம் கலந்துகொள்ளவில்லை என்றால், நாம் மக்களால் வெறுக்கப்படுவோம் என்று பிற கட்சிகள் அஞ்சும் வகையிலும் இந்தக் கையெழுத்து இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்தக் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

பொறியாளர் அணி செயலாளர் அண்ணன் எஸ்.கே.பி.கருணா அவர்கள், கையெழுத்து இயக்கம் தொடங்குவதற்கு முதல்நாளே ``அடுத்த நீட் நுழைவுத்தேர்வு இன்ஜினியரிங் கல்விக்குத்தான் இருக்கும் என்கிறார்கள். இன்ஜினியரிங், பாலிடெக்னிக் படிக்கும் லட்சக்கணக்கானோரை இந்தக் கையெழுத்து இயக்கத்தில் நாங்கள் கையெழுத்துபோட வைக்கிறோம். இந்தக் கையெழுத்து இயக்கத்தில் பொறியாளர் அணியையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்” என்றார்.

இப்படி ஒவ்வோர் அணியும் இந்தக் கையெழுத்து இயக்கத்தில் இணைந்து செயல்பட ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். உங்களின் இந்த ஆர்வத்தை, செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காகத்தான் இந்தக் கலந்தாலோசனைக் கூட்டம் இங்கு நடைபெற்று வருகிறது.

இளைஞர் அணி நிர்வாகிகள் தற்போது அனைத்து கழக மாவட்டங்களிலும் ‘இல்லந்தோறும் இளைஞர் அணி’ என்ற முன்னெடுப்பின் மூலம் 16 முதல் 35 வயதுள்ளவர்களை அணியில் உறுப்பினர்களாகச் சேர்த்து வருகின்றனர். அப்படி உறுப்பினர் சேர்க்கச் செல்லும்போது, ‘நீட் விலக்கு நம் இலக்கு’ என்ற இந்த முன்னெடுப்புக்கான கையெழுத்துகளையும் இணையதளத்தின் வாயிலாகப் பெறுமாறு அணியின் நிர்வாகிகளை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாணவர் அணியினர் ‘நீட்’ தேர்வுக்கு எதிராக கல்லூரிகளில் முகாம் நடத்துங்கள்!**

மாணவர் அணி நிர்வாகிகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கலை அறிவியல் கல்லூரிகளிலும் முகாம் நடத்தி ‘மாணவர்களின் நீட் தேர்வுக்கு எதிரான மனநிலையைக் கையெழுத்தாகப் பதிவு செய்ய வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முகாம்கள் தங்குதடையின்றி நடைபெற உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் உதவியையும் நாம் பெறலாம்.

மருத்துவக் கல்லூரி செவிலியர் கல்லூரி மாணவ மாணவிகளிடமும், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்களிடமும் கையெழுத்துகளைப் பெறும் பொறுப்பைத் தங்களின் நிர்வாகிகள் மூலம் ஒருங்கிணைக்குமாறு மருத்துவ அணியைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மகளிர் சுயஉதவிக் குழுக்கள், குடும்பத் தலைவிகள் - மாணவிகள் ஆகியோரிடம் கையெழுத்து பெறுவதை நம் மகளிர் அணி நிர்வாகிகள் ஒருங்கிணைப்பார்கள்.

**நீட் எதிர்ப்பு இயக்கத்தை அனைத்து அணியினரும் நடத்துங்கள்!**

இதேபோல அமைப்புசாரா ஓட்டுநர் அணி, அனைத்து வகையான வாகன ஓட்டுநர்களிடமும் கையெழுத்துப் பெறலாம். சிறு சிறு முகாம்கள் நடத்தியோ, ஆட்டோ ஸ்டாண்டு, பேருந்து நிலையங்கள்... போன்ற இடங்களுக்கு நேரில் சென்றோ இந்த நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை நடத்துமாறு அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரும் நிறுவனங்களின் வளாகத்தில் முகாம் அமைத்து, தொழிலாளர்களிடம் கையெழுத்து பெறுவதைத் தொழிலாளர் அணியும், மீனவர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், வர்த்தகர்கள், சிறுபான்மையின மக்கள், வழக்கறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், அயலகத் தமிழர்கள்... என இவர்களின் நலனுக்காக இயங்கக் கூடிய கழக அணிகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கையெழுத்து பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கையெழுத்து இயக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணிக்குக் கூடுதல் பொறுப்பு உள்ளது. கடந்த சில நாட்களாக அவர்கள், புதிய நிர்வாகிகளின் அறிமுகக் கூட்டம், முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட சமூக வலைத்தளத் தன்னார்வலர்கள் கூட்டம் எனப் பரபரப்பாக இருந்தார்கள். தற்போது ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தில் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

**இந்த ஒருங்கிணைப்புப் பணிக்கு அனைத்து மாவட்டக் கழகங்களின் சார்பில் அறிவாலயத்தில் இருந்து ஒருவரும், ஒவ்வொரு அணியில் இருந்தும் அதன் மாநில நிர்வாகி ஒருவரும் என நிர்வாகிகளை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் அவர்களை ஒரு வாட்ஸ்அப் குரூப்பில் இணைத்து, எந்தெந்த மாவட்டம் எத்தனை கார்டுகளைப் பெற்றுச் சென்றுள்ளார்கள், கையெழுத்து இடப்பட்டு எத்தனை கார்டுகள் திரும்ப வந்துள்ளன, இணையதளத்தில் எந்தெந்த மாவட்டம் அதிகமாக கையெழுத்து இட்டுள்ளது, எந்த மாவட்டம் குறைவாக உள்ளது, எந்தெந்த அணி எத்தனை முகாம்களை நடத்தி, அதிகக் கையெழுத்துகளைப் பெற்றுள்ளது, எது குறைவாகப் பெற்றுள்ளது எனத் தகவல்களைப் பெற்று பணிகளை வேகப்படுத்த வசதியாக இருக்கும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு.**

**ஐ.டி.விங் செயலாளருக்கு அன்பான வேண்டுகோள்!**

நீட் தேர்வுக்கு எதிரான இந்த இணையதளத்தில் கையெழுத்து பெறுவதை ஊக்குவித்து, இதை பிரபலப்படுத்துவதற்கு தங்கள் அணி நிர்வாகிகளுடன் கலந்து பேசி `ப்ராசஸ்’ ஒன்றை உருவாக்கித் தருமாறு அமைச்சரும் ஐ.டி.விங் செயலாளருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நிர்வாகிகள் போஸ்ட் கார்டில் கையெழுத்து இட்டாலும், இணையதளத்தில் கையெழுத்து இட்டாலும், கையெழுத்து இடுவதையும், அந்த போஸ்ட் கார்டையும் புகைப்படம் எடுத்து தங்களுடைய சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிருமாறும், அப்படிப் பகிரும்போது இந்த இணையதள லிங்கையும், #BanNEET #நீட்_விலக்கு_நம்_இலக்கு ஹேஸ்டேக்களையும் சேர்த்து பகிருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**சமூகச் செயல்பாட்டாளர்களின் ஆதரவை வலைதளப் பக்கத்தில் பகிருங்கள்!**

அதேபோல மாவட்டங்களில் உள்ள பிரபலங்கள், மக்கள் செல்வாக்குள்ளவர்கள், மரியாதைக்குரிய மனிதர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், திரைக் கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் மருத்துவர்கள்... போன்றோரிடம் கையெழுத்து பெறுவதை, புகைப்படம் எடுத்து நம் அதிகாரப்பூர்வ சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

முதலில் நம் அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்டஒன்றியநகரபகுதி பேரூர் செயலாளர்கள் என நம் கழக நிர்வாகிகள், அணிகளின் மாநிலமாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கையெழுத்து இடும் புகைப்படங்களை ஹேஸ்டேக் மற்றும் நம் இணையதள இணைப்புடன் அவரவர்களின் சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிர, நம் நிர்வாகிகளை ஊக்கப்படுத்துமாறு அமைப்புச் செயலாளர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று முன்தினம் கூட சென்னை வில்லிவாக்கத்தில் அண்ணன் தயாநிதி மாறன், அண்ணன் எழிலரசன் உள்ளிட்ட நம் நிர்வாகிகள் கலந்துகொண்ட மாணவர் அணி சார்பில் நடைபெற்ற வேறொரு நிகழ்ச்சியில் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்துக்கான அஞ்சல் அட்டைகளை வழங்கி, மாணவர்களிடம் கையெழுத்து பெற்றுள்ளார்கள்.

இதேபோல் நான் கலந்துகொள்ளும் கழக நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும், அதன் ஒரு பகுதியாக இந்தக் கையெழுத்து இயக்கமும் நடத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல மற்ற அணி நிர்வாகிகளும் இதை முன்னெடுக்குமாறும், மாவட்டக் கழகம் சார்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் இதைப் பின்பற்ற அவர்களை அறிவுறுத்துமாறும் அமைப்புச் செயலாளர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**இணையத்தின் மூலம் மட்டும் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து!**

50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற வேண்டும் என்பது நம் இலக்கு. ஆனால், அதைவிட அதிகமான கையெழுத்துகளை, அதுவும் குறிப்பாக இணையதளத்தின் மூலமாக மட்டுமே 50 லட்சத்துக்கும் மேற்பட்ட கையெழுத்துகளை நாம் பெற வேண்டும் என்ற இலக்குடன் பயணிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## நாம் தொடங்கியுள்ள கையெழுத்து இயக்கம் நாடு முழுவதும் பரவட்டும்!

இந்தப் பணியை தினமும் ஃபாலோ செய்து ஒருங்கிணைத்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

இந்த ஒருங்கிணைப்புப் பணிக்கு அனைத்து மாவட்டக் கழகங்களின் சார்பில் அறிவாலயத்தில் இருந்து ஒருவரும், ஒவ்வொரு அணியில் இருந்தும் அதன் மாநில நிர்வாகி ஒருவரும் என நிர்வாகிகளை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் அவர்களை ஒரு வாட்ஸ்அப் குரூப்பில் இணைத்து, எந்தெந்த மாவட்டம் எத்தனை கார்டுகளைப் பெற்றுச் சென்றுள்ளார்கள், கையெழுத்து இடப்பட்டு எத்தனை கார்டுகள் திரும்ப வந்துள்ளன, இணையதளத்தில் எந்தெந்த மாவட்டம் அதிகமாக கையெழுத்து இட்டுள்ளது, எந்த மாவட்டம் குறைவாக உள்ளது, எந்தெந்த அணி எத்தனை முகாம்களை நடத்தி, அதிக் கையெழுத்துகளைப் பெற்றுள்ளது, எது குறைவாகப் பெற்றுள்ளது எனத் தகவல்களைப் பெற்று பணிகளை வேகப்படுத்த வசதியாக இருக்கும் என்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு.

**எளிதாக இணையதளம் மூலம் கையெழுத்திடும் வசதியைச் செய்க!**

அதேபோல் முகாம்களின் மூலமும், நேரில் சென்று கையெழுத்து பெறுபவர்களும், நீட் தேர்வினால் நம் மாணவர்கள் எந்தெந்த வகையில் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறிய பின் கையெழுத்துப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கையெழுத்து இயக்கத்தைக் களத்திலும் இணையதளத்திலும் ப்ரமோட் செய்ய, சில யோசனைகளும் உள்ளன. இந்த இணையதளத்துக்கான க்யூ ஆர் கோட்ஐ உருவாக்கி, அதை போஸ்டர்களில் பிரின்ட் செய்து, தொகுதிக்கு 500 போஸ்டர்கள் அனுப்பி அவற்றைக் கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் கூடும் இடங்களில் ஒட்டலாம்.

அதேபோல இந்த க்யூஆர் கோட்ஐ சமூக வலைத்தளத்துக்காக நாம் தயாரிக்கும் அனைத்து போட்டோ கார்டுகளிலும் சேர்த்து டிசைன் செய்து ப்ரமோட் செய்யலாம். `பாக முகவர்கள் மாநாடு’ போன்று கழகத்தினர் பெருமளவில் கூடும் இடங்களிலும் இந்த க்யூஆர் கோடு ஃப்ளெக்ஸ்களை வைத்து அதன்மூலம் அவர்களையும் கையெழுத்து இட வைக்கலாம். கல்லூரிகள் முன்பு அமைக்கும் முகாம்களிலும் இந்த க்யூஆர் கோட் ஸ்கேன் செய்வதன் மூலம், எளிதாக இணையதளத்துக்குச் சென்று கையெழுத்திடும் வசதியைச் செய்யலாம்.

அதேபோல மிகவும் கவனமுடன் தவிர்க்க வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. வீட்டில் இருந்தபடியே ஒருவரே பல கார்டுகளை வெவ்வேறு பெயர்களில் நிரப்பி, கையெழுத்து இடுவது, ஆட்களை அமர்த்தி வோட்டர் லிஸ்ட்களை வைத்து நிரப்பி கையெழுத்து இடுவது போன்ற எண்ணிக்கைக்காகத் தவறான வழிகளில் கவுன்ட் காட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என்று நிர்வாகிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நீட் தேர்வை ஒழிக்க, நாம் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும், முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரும், அ.தி.மு.க. வினர் யாரும் நீட் தேர்வுக்கு எதிராகக் கையெழுத்து போட மாட்டோம். இது நாடகம் என்கின்றனர்.

**அ.தி.மு.க. வினரின் கூற்றை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை!**

நீட்டுக்கு எதிராக அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா திருப்பி அனுப்பப்பட்டதையே வெளியில் சொல்லாமல் நாடகம் நடத்தியவர்கள் அவர்கள்தான். நாம் உண்மையான உணர்வோடுதான் இந்தப்பணியைத் தொடங்கியிருக்கிறோம்.

அதனால்தான் நாம் எல்லோரையும் இந்தக் கையெழுத்தில் பங்கேற்க அழைக்கிறோம். எனவே, மற்றவர்கள் கூறும் குறைகளை எல்லாம் பொருட்படுத்தாமல், நம் மாணவர்களின் கல்வி உரிமையை மனதில் வைத்து நாம் செயல்பட வேண்டும். நீட் தேர்வுக்கு எதிரான இந்தக் கையெழுத்து இயக்கம் இளைஞர் அணி மாணவர் அணிமருத்துவ அணி முன்னெடுத்திருந்தாலும், இதன் வெற்றி என்பது நம் கழகத்துக்கான வெற்றி என்பதை மனதில்கொண்டு அனைவரும் இதில் முழுமையாகப் பங்கெடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆலோனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த அமைப்புச் செயலாளர் அண்ணன் ஆர்.எஸ்.பாரதி அவர்களுக்கும், அணிகளின் அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

முன்னதாக கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை உரையாற்றினார். மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ, நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி கூறினார்.

---

### ஒன்றிய அரசுக்கு மேலும் அழுத்தம் தந்து

# ‘நீட்’ விலக்குப் பெறவே கையெழுத்து இயக்கம்!

### அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டி!

சென்னை,அக்.25–

நீட் விவகாரத்தில் மேலும் அழுத்தம் தருவதற்காகவே நீட் விலக்கு கையெழுத்து இயக்கம். மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நீட் தேர்வில் இருந்து விலக்கு கிடைக்கும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியில் குறிப்பிட்டார்.



நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்து இயக்கம் தமிழகம் முழுவதும் நடத்துவது தொடர்பாக காணொலி காட்சி வழியாக ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்பட தி.மு.க. அனைத்து அணி செயலாளர்கள் பங்கேற்றனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி, நீட் விலக்கு கையெழுத்து இயக்கத்தை தமிழகம் முழுவதும் கொண்டு செல்வதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாக தெரிவித்தார். இதில் நீட் தேர்வு எதிர்ப்பு எதற்கு என்பது குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறினார். பா.ஜ.க. ஆட்சி வருவதற்கு முன்பாக 15 லட்சம் வங்கியில் செலுத்தப்படும் என்றும் 2 கோடி பேருக்கு வேலை தரப்படும் என கூறியதை செய்தார்களா? என கேள்வி எழுப்பினார். கடந்த ஆட்சியில் நீதிமன்றத்தில் சரியாக வாதாடாத காரணத்தினால் தான் நீட் விவகாரத்தில் வெற்றி பெற முடியவில்லை என்று கூறிய அவர், ஜெயலலிதா, கலைஞர் ஆகியோர் இருந்த போது தமிழகத்தில் வராத நீட், அ.தி.மு.க.வால் தான் வந்ததாக குற்றம்சாட்டினார். நீட் விவகாரத்தில் மேலும் அழுத்தம் தருவதற்காகவே நீட் விலக்கு கையெழுத்து இயக்கம் என்றும் ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நீட் விலக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக கொடிக்கம்பம் வைக்க கூடாது என விதி இருந்தும் சண்டை இழுக்கவே பா.ஜ.க. விதிமுறை மீறி கொடிக்கம்பத்தில் பிரச்சினை செய்வதாகவும், முதலமைச்சர் அவர்கள் மேயராக இருந்த போதே கொடி கம்பங்களை அகற்றியுள்ளதாக கூறினார். திமுக கொடி கம்பம் விதிமுறை மீறி எங்கு இருக்கிறது என கூறினால் அகற்ற தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு கலைஞரின் கவிதைகள், திரை வசனங்கள் ஒப்பித்தல் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். உடன் செ.இராமலிங்கம் எம்.பி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளர் அர.திராவிடம், கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் – துணை மேயர் சு.ப.தமிழழகன், கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் கே.கே.எஸ்.ராஜா, ச.பார்த்திபன், ம.சம்பத், எம்.நெடுஞ்செழியன், வி.மாரி, டி.எம்.முபாரக்ஹுசைன், ப.பாரி, க.மதியழகன் மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உள்ளனர்.


காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவர்
சா.பீட்டர் அல்போன்ஸ் Ex.MP
தலைவர் - தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம்
அவர்களின் இல்லத்
திருமண வரவேற்பு விழாவிற்கு
வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக! வருக !!
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்
மாவட்ட கழக செயலாளர்,
பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
அனைவரையும் வருக! வருக!!
என அன்புடன் வரவேற்கிறோம்....
மணமக்கள் :
டாக்டர் நிகாஷ் MBBS., MD ஜனனி ஜோயல் B.Sc.,(MS)
திருமண வரவேற்பு: 25.10.2023 புதன்கிழமை நேரம் மாலை 6.30 மணிக்கு
இடம் : மேயர் ராமநாதன் செட்டியார் திருமண மண்டபம் சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
P.S.சரவணக்குமார் D.E.E, MC
மாமன்ற உறுப்பினர்,
கோவை மாநகராட்சி
எஸ்.எஸ்.போஸ் MC
மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்
மதுரை மாநகராட்சி
எல்.ரெக்ஸ் MC
மாவட்ட தலைவர்,
திருச்சி மாநகர் மாவட்டம்
M.அம்பிகா முத்துதுரை MC
மாமன்ற உறுப்பினர்
திருநெல்வேலி மாநகராட்சி


கலைஞர் 100 1924 - 2023
கலைஞர்
நூற்றாண்டு
விழாவை முன்னிட்டு
தி.மு.க இளைஞர் அணி
செயல் வீரர்கள்
கூட்டத்திற்கும்
கழக மூத்த
முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கிட
வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
தி.மு.க. இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக ! வருக !!
மாண்புமிகு. ஐ.பெரியசாமி B.A., B.G.L.,
கழக துணைப் பொதுச் செயலாளர்,
ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
நா.இராமகிருஷ்ணன் M.A.,MLA.
தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்
தங்கதமிழ்செல்வன் M.A.,Ex.MLA. Ex.MP.,
தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்
ஆ.மகாராஜன் MLA.,
ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர்
ஆண்டிபட்டி மேற்கு ஒன்றிய செயலாளர்
கே.எஸ்.சரவணக்குமார் B.E., MBA.,
பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர்
பெரியகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர்
ஜி.பி.ராஜா B.Sc., IT..
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
செஞ்சூரி செல்வம் B.Sc.,
தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
ஏ.ஆஜிப்கான் B.Sc., IT..
வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
சுருளிப்பட்டி S.சுகுமார்
B.பிரபாகரன்
அபுதாகீர்
கராத்தே.இராமகிருஷ்ணன்
V.K.முருகன்
மாரத்தான் ஸ்டீபன் ராஜ்
மு.பரணீஸ்வரன்
க.ஜெயக்குமார்
ப.செல்லத்துரை
க.தெய்வேந்திரன்
க. முத்துராம்ஜி
தேனி தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட திமுக


WE FIGHT FOR OUR RIGHTS
ARASU ARTS
நாள் : 25.10.2023 புதன்கிழமை
இடம் : தேனி மாவட்டம்
கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கவும்,
தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள்
ஆலோசனை கூட்டத்திற்கும் மற்றும்
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க
வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன்,
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக. வருக..
இ.பெரியசாமி
மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் –
கழக துணைப் பொதுச்செயலாளர்
தங்க தமிழ்செல்வன்
தேனி வடக்கு மாவட்டச் செயலாளர்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
அன்புடன் வரவேற்கும்
S.லட்சுமணன்
போடி ஒன்றிய தி.மு.க. செயலாளர் (மேற்கு)
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்



திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம் குலதீபமங்கலம், விளந்தை, கழுமலம், சொரையப்பட்டு, கொழுந்திராம்பட்டு, அத்திப்பாக்கம், நெடுங்கம்பட்டு, சடைகட்டி ஆகிய எட்டு ஊராட்சிகளில் உள்ள 19 வாக்குச்சாவடி முகவர்களிடம் (BLA2) உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி முன்னிலையில் ஆலோசனை நடத்தினார். மேலும் எட்டு ஊராட்சிகளில் பொதுமக்களைச் சந்தித்து கோரிக்கைகளை கேட்டறிந்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர், நகர மன்றத் தலைவர் டி. என். முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. செல்வராஜ், நகரச் செயலாளர் கோபி கிருஷ்ணன், நகர மன்ற துணைத் தலைவர் குணா, இளைஞர் அணி பாலமுருகன், வழக்கறிஞர் நிஜாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மின்னொளி கைப்பந்து போட்டி நாகையில் நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்ட கைப்பந்து வீரர்களுக்கு பரிசுகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் பனைவிதை மற்றும் பரிசுகளை வழங்கினார். நாகை தொகுதி பொறுப்பாளர் வி.ஜெய பிரகாஷ், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம். ஆர்.செந்தில்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வ.கமல், நிர்வாகிகள் மணிகண்டன், இராமராஜன், சுதாகரன், டேனியல் விஜய் நாகை நகரக் கழக துணைச் செயலாளர் வெற்றிலைக் கடை சிவா மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# செஞ்சியில் 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கம்!

## அமைச்சர் செஞ்சிமஸ்தான் தொடங்கிவைத்தார்!

செஞ்சி, அக். 25-

ஏழை எளிய அரசுப்பள்ளி மாணவர்களின் மருத்துவ கனவை சிதைக்கும் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் மசோதாவிற்கு விரைந்து ஒப்புதல் வழங்கவலியுறுத்தி இந்திய குடியரசுத் தலைவருக்கு 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்கள் பெற்று கடிதம் அனுப்புவதற்காக கழகஇளைஞர் அணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் கையெழுத்து பெறும் நிகழ்ச்சியை தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் செஞ்சியில் நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கம் நிகழ்ச்சி செஞ்சி தனியார் திருமணமண்டத்தில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா, மருத்துவ அணி அமைப்பாளர்சக்தி பிரியன் ஆகியயோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

சிறப்பு அழைப்பாளரும்,மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ். கே.பி.கருணாநிதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீத்பதி சொங்கலிங்கம், செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்கள்விஜயகுமார், சொக்கலிங்கம், தலைமை தீர்மான குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், மாவட்ட துணை செயலாளர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, மணிமாறன், செழியன், சாந்தி சுப்பிரமணியன், ராஜாராமன், ரவிசந்திரன்,பேரூர் செயலாளர்கள்செஞ்சி கார்த்திக், அனந்தபுரம் சம்பத்,பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், கதிரேசன், சாந்தி ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அன்பு செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

### திருவாரூர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# கலைஞரின் கவிதைகள்- வசனங்கள் ஒப்புவிக்கும் போட்டி!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு

திருவாரூர்,அக்.25-

திருவாரூர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா 29.10.2023.ஞாயிறு அன்று திருவாரூரில் நடைபெற உள்ளது. இந்த விழாவில் கலைஞர் அவர்களின் கவிதைகள் மற்றும் திரைப்பட வசனங்களை மாணவ மாணவிகள் ஒப்புவிக்கும் போட்டி நடைபெற உள்ளது. இந்த விழாவில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் பங்கேற்கவிருக்கின்றனர்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களோடும், மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆலோசனைகளின்படியும் திருவாரூர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா கலைஞர் அவர்களின் கவிதைகள் மற்றும் திரைப்பட வசனங்களை மாணவ மாணவிகள் ஒப்புவிக்கும் போட்டியாக நடைபெற உள்ளது.

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா , மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் ராசு.இளங்கோவன் ஆகியோர் தொடக்கக் உரை ஆற்ற இருக்கின்றனர். மாவட்ட அமைப்பாளர் ராஜ்.என்கிற கருணாநிதி வரவேற்புரை வாசிக்கிறார். போட்டிகளை கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில செயலாளர் அர.திருவிடம் துவக்கி வைக்கிறார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா உள்ளிட்டோர் பங்கேற்று போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை தலைவர் இராம.கலைச்செல்வன், துணை அமைப்பாளர்கள் கே.எஸ்.சி.கண்ணதாசன், எ.வி.பாலாஜி, பி. ஜெயபால், என்.பார்த்தசாரதி, எம்.முருகானந்தம் ஆகியோர் விழாவுக் கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

### கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. - மதுரா செந்தில் பங்கேற்பு! தலைமைக்கழகப் பேச்சாளர்

# எம்.எல்.நாதன் இல்ல மணவிழா! டி.ஆர்.பாலு எம்.பி. வாழ்த்து!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - கீதாஜீவன் - த.மனோ தங்கராஜ் - மா.மதிவேந்தன் பங்கேற்பு!

சென்னை, அக்.25-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, தலைமைக் கழகப் பேச்சாளர்- மாவட்டக் கழகப் பிரதிநிதி வனத்துறை அமைச்சர் அலுவலகத்தில் பணிபுரியும் எம்.லோகநாதன் என்கிற எம்.எல். நாதன் - எல்.ஹேமலதா ஆகியோரின் புதல்வி எல்.சங்கவிக்கும், அ.வைத்தீஸ்வரன்- செ.கௌசல்யா ஆகியோரின் மகன் கே.வி.சிவசுப்பிரமணியனுக்கும் மணவிழா 1.11.2023, புதன் கிழமை அன்று காலை 9.30 மணிக்கு, சென்னை மயிலாப்பூர், கற்பகாம்மாள் கபாலீஸ்வரர் திருக்கோயில் நவராத்திரி மண்டபத்தில் நடைபெறுகின்றது.

அதனைத் தொடர்ந்து 1.11.2023 புதன்கிழமை அன்று மாலை 6 மணிக்கு மணவிழா வரவேற்பு சென்னை-89, மவுண்ட் பூவிருந்தவல்லி சாலை இராமாபுரம் (எம்.ஜி.ஆர். தோட்டம் அருகில்) ஜீவன் ஜோதி திருமண மஹாலில் நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வக்குமார், கே.ராஜீ, ஆ.ராதா செல்வம், இராமாபுரம் வி. ராஜேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பி.ராஜேந்திரன், மு.நடராசன், ரஞ்சினி ராஜேந்திரன், வ.சண்முகம், ஜி.இராமகிருஷ்ணன், செ.ரவி, ஏ.பி. எத்திராஜ், மூன்லைட் டி. ரவி, எம்.மதன்ராஜ், பி. ரமேஷ் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத்தலைவருமான டி.ஆர்.பாலு, மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர்கள் கீதாஜீவன், த.மனோ தங்கராஜ், மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்கள் சங்கவி - கே. வி. சிவசுப்பிரமணியன் ஆகியோரை வாழ்த்துகின்றனர்.



மேலும் அரசு கொறடா கோவி. செழியன், கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம். பி., விஜய் வசந்த் எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., நாகர்கோயில் மேயர் ரெ.மகேஷ், எஸ். எம்.மதுராசெந்தில், முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ் ராஜன், கோ.ஐயப்பன் எம். எல்.ஏ. எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ., கே.பொன்னுசாமி எம். எல்.ஏ., ப.ரங்கநாதன், பி. இராமலிங்கம் எம்.எல்.ஏ., சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், ஜெ.ஹெலன் டேவிட்சன், எஸ்.ஆஸ்டின், க.தனசேகரன் எம்.சி., கவிஞர் காசி முத்துமாணிக்கம், நொளம்பூர் வே.ராஜன், அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, வீர. கனிமொழி, மருத்துவர் ஆர். மாயவன், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் தா.விஸ்வநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பாலவாக்கம் க. சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், இ.நடராஜன், எம். டி.ஆர்.நாதன், ச.பரமசிவம், மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், ரத்னா லோகேஸ்வரன், த.சரவணக்குமார், ஹேமலதா கணபதி எம்.சி., செல்வி ரமேஷ் எம்.சி., ச. சங்கர் கணேஷ் எம்.சி., எஸ். பாரதி எம்.சி., சாந்தி இராமலிங்கம் எம்.சி., ஆ.மாலினி எம்.சி., எம்.இ.ஸ்டாலின் எம்.சி., ரமணி மாதவன் எம். சி., கே.வி.திலகர் எம்.சி., எஸ்.மணி, கே.குமரேசன், சைதை எஸ்.சாதிக், பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால் பாண்டியன், தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம.உதயகுமார் மற்றும் பலர் கலந்துகொண்டு மணமக்களைவாழ்த்துகின்றனர்.

எம்.எல்.நாதன் நன்றி கூறுகிறார்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட

# ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி தொகுதிகளின் BLA 2 ஆய்வு கூட்டம் !

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமை! ஆர்.டி.இ.ஆதிசேசன், பழ.கணேசன் பங்கேற்பு

திருவள்ளூர், அக். 25-

திருவள்ளூர் கிழக்கு ஒன்றியத்குட்பட்ட 25வேப்பம்பட்டு, 26 வேப்பம்பட்டு , அயத்தூர் சார்பில் , பாகம் உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் ஏற்பாட்டியல் நடைபெற்றது. எஸ்.ஜெயபாலன், பா. நரேஷ்குமார் ஒன்றிய நிர்வாகிகள் க.ஜெயராமன், ராஜா, ஞா.ரமேஷ், குட்டி (எ) பக்த்தவசலு, இ.என். சேகர் , இம்மன்வெல் ஆர். திலிப் ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இதில் பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் பழ.கணேஷ் பங்கேற்று பல்வேறு ஆலோசனை வழங்கினார். இதில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் குமரேசன், சரவண மூர்த்தி, ராமானுஜம், ராஜேஷ், மோதிஷ் ஜித்து, முருகன் பாஸ்கர், ஆனந்த , பா.ஆதவன், பக்கம் பார்த்திபன், சுரேஷ், ஒன்றிய அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , பாகமுகவர்கள், பாகம் உறுப்பினர்கள்,கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டார்கள் .

அதேபோல் ஆவடி தொகுதிகுட்பட்ட ஆவடி கிழக்கு பகுதி திமுக சார்பில் பாக BLA2 BLC ஆய்வு கூட்டம் பகுதி செயலாளர் பேபிசேகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ. வினோத், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மாநகர மேயர் ஜி.உதயகுமார் முன்னிலை வகித்தார்கள். இக் கூட்டத்தில் ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் பாக முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் அமுதா சேகர், ஜான், வெங்கடேசன், டிசோஷா, ராஜி, சக்திவேல், குருவான், பாண்டியன், நாகராஜ், செல்வம், கோபால், பிரபுவேல், சுதாகர், கிருஷ்ண மூர்த்தி, தினா, ராஜ்குமார், முத்து, விமல், டேனியல் உள்பட பலர் பங்கேற்றனர்.

திருவள்ளூர் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பெருமாள் பட்டு , புட்லூர் , காக்களூர் ஆகிய ஊராட்சியில் பாக முகவர்கள் BLA 2 BLC ஆய்வு கூட்டம் ஒன்றிய செயலாளர் காக்களூர் ஆர்.ஜெயசீலன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் த.எத்திராஜ், கே. கே.சொக்கலிங்கம், தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.கே.சீனிவாசன், டி.எம். ராமச்சந்திரன், பரமேஸ்வரன், தயாளன், எஸ்.என்.குமார், வி.தியாகராஜன், எஸ். சௌந்தரராஜன், த.சுகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் பழ.கணேசன் கலந்துகொண்டு பாக முகவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போது பணிகள் மேற்கொள்ள வேண்டுவது என பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் லாசர், டி.கே.பூவண்ணன், ஜெய்சங்கர், சிவாபிரகாஷ், இயேசு பாலன், ஸ்ரீதர், சரவணன், ராஜினி, செந்தில், சதீஷ், கார்த்தி, சேது உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி மத்திய மாவட்டம் திமுக பொறியாளர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் புருஷோத்தமன், மாவட்ட தலைவர் இளங்கோவன் ஏற்பாட்டில் மாநிலம் தழுவிய மாபெரும் பேச்சுப்போட்டி நடை பெற்றது. இந்த நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர், அன்பழகன், நடுவராக கவிஞர் நந்தலாலா, திருப்பதி, திருநாவுக்கரசு, ஒன்றியச் செயலாளர்கள் சண்முகநாதன், சக்திவேல் உள்ளிட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ்

# மன்னார்குடி நகராட்சியில் 10 கோடி ரூபாயில் வளர்ச்சிப் பணிகள்!

மன்னார்குடி,அக்.25-

மன்னார்குடி நகராட்சிதிமுக நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜா தலைமையில் பல்வேறு கட்ட வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டு பொதுமக்களின் பாராட்டினை பெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக மன்னார்குடியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பத்து கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் முக.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசு மக்களுக்கான திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு பல்வேறு புரட்சி திட்டங்களை நிறைவேற்றி வருகிறது .அதன்படி தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்கள் தோறும் இந்தியாவே திரும்பிப்பார்க்கும் அளவுக்கு வளர்ச்சியை பெற்றுவருகிறது. தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மன்னார்குடி சட்டமன்ற தொகுதி மக்களுக்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றுவருகிறார்.

அதன்படி மன்னார்குடி நகரத்தில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் நோக்கத்தில் நகரில் உள்ள குளங்களில் முக்கிய நீர் நிலைகளான தாமரைக்குளம், ருக்குமணி குளம், செங்குளம், அண்ணா மலை நாதர் குளம் மற்றும் பராங்குசம் குளம் என ஐந்து குளங்களும் 'கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட் டத்தின் கீழ் சுமார் ரூ.5.40 கோடி மதிப்பில் முழுமையாக தூர் வாரப்பட்டு, குளங்களின் கரைகள் பலப்படுத் தப் பட்டுள்ளது. மேலும், கரைகளில் பொது மக்கள் நடைப் பயிற்சி மேற்கொள்ளும் வகையில் பேவர் பிளாக் நடைபாதை மற்றும் மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் நகரத்தில் உள்ள 43 மண்சாலைகள் ரூ 4.30 கோடி பேவர் பிளாக் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளது. நல்லான்குளம் மற்றும் திருப்பாற்கடல் குளம் மற்றும் கல்கி பூங்கா, பிஆர்எம் பூங்கா ஆகியவை ரூ 42 லடசம் மதிப்பில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்ப்புற மேம் பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் மக்கள் நலன் சார்ந்த வளர்ச்சி பணிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ 10 கோடி மதிப்பில் நகரத்தில் நீர்நிலைகளை மேம்படுத்துதல், மண் சாலைகளை மறு சீரமைத்தல், பூங்காக்களை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொளளப்பட்டுள்ளது.

மன்னார்குடி நகரத்தில் உள்ள முக்கிய மழைநீர் வடிகால்கள் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் இருந்ததால் சிறு மழை பெய்தால் கூட சாலை களில் மழை நீர் செல்ல வழியில்லாமல் தேங்கி கிடக்கும் நிலை இருந்து வந்தது.

இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் சிறப்பு திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு பெரும்பாலான வடிகால் வாய்க்கால்கள் முழுமையாக தூர்வார பட்டுள்ளது இதன்மூலம் மழைக் காலங்களில் ஏற்படும் நீர் தேக்கம் மற்றும் கொசுக்கள் உற்பத்தியாவது தடுக்கப் பட்டுள்ளது.

நகரத்தில் உள்ள அனைத்து வார்டுகளிலும் நேரடி ஆய்வு பணிகளில் ஈடுபட்ட போது ஏராளமான மின்கம்பங்கள் சேதமடைந்த நிலையில் இருந்தது கண்டறியப்பட்டு போர்க் கால அடிப்படையில் அந்த மின்கம்பங்கள் புதிதாக மாற்றப்பட்டுள்ளது.

மன்னார்குடி நகரத்தில் டெங்கு, மலேரியா உள்ளிட்ட நோய்கள் பரவாமல் தடுக்கும் வகையில் நவீன கருவிகள் புதிதாக வாங்கப் பட்டு, அதற்கென தனி பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வார்டு தோறும் கொசு மருந்து அடிக்கும் பணிகள் தொய்வின்றி நடந்து வருகிறது.

ஆர்பி சிவம் நகரில் 30 வருடங்களுக்கு மேலாக குவிந்து கிடந்த பழைய குப்பைகள் அனைத்தும் ரூ 4.33 கோடி மதிப்பில் பயோ மைனிங் திட்டம் மூலம் இரண்டு கட்டங்களாக அகற்றும் பணிகள் 90 சதவீதம் முடிவடைந்து உள்ளது.

மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வளர்ச்சி பணிகளை துரிதப்படுத்தி மன்னார்குடி நகராட்சியை தமிழகத்தின் முன்னோடி நகராட்சியாக மாற்ற நகர் மன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்போடு தொய்வின்றி பணியாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரும், செஞ்சி ஒன்றிய கவுன்சிலருமான உமா மகேஸ்வரியின் கணவர் ஆனந்தன் உடல் நல குறைவால் மறைவெய்தியதை அடுத்து அனையேரியில் அவரது உடலுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று அன்னாரது உடலுக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மேட்டூர் தொகுதி மேச்சேரி ஒன்றியத்தில் உள்ள பாணாபுரம் ஊராட்சியில் பாக முகவர்கள் கூட்டத்தில் ஆதிதிராவிடர் குழு இணைச் செயலாளரும் தொகுதி பார்வையாளருமான திப்பம்பட்டி ஆறுசாமி கலந்து கொண்டு பேசினார். உடன் ஒன்றியச் செயலாளர் சீனிவாச பெருமாள், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சதீஷ் உள்பட ஒன்றிய நிர்வாகிகள் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகராட்சி, மோரனப்பள்ளியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி திட்டம் 2023–24 ன் கீழ், ரூ.30 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர், 21.10.2023 அன்று துவக்கி வைத்தார்கள். உடன் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, ஒசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ.செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ் (ஓசூர்), டி.ராமச்சந்திரன் (தளி), ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.த.சினேகா ஆகியோர் உள்ளனர்.

## மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு!

மாமல்லபுரம், அக்.25:

தொடர் விடுமுறையை முன்னிட்டு மாமல்லபுரத்தில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தந்து புராதன சின்னங்களை கண்டு ரசித்தனர்.

மாமல்லபுரம் உலக புகழ்பெற்ற சுற்றுலா தலமாக திகழ்வதால் தினமும் 300க்கும் மேற்பட்ட சுற்றுலா வாகனங்களில் ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில், தற்போது சீசன் காலம் தொடங்கி உள்ள நிலையில், மாமல்லபுரத்திற்கு அதிகளவில் வெளிநாட்டுப் பயணிகள் வருகை தருகின்றனர்.

குறிப்பாக, ஞாயிற்றுக்கிழமை, ஆயுத பூஜை, விஜயதசமி என தொடர் விடுமுறையை முன்னிட்டு மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் அரசு பஸ்களிலும், கார், பைக் உள்ளிட்ட வாகனங்களிலும் கூட்டம், கூட்டமாக வரத்தொடங்கியதால் கடற்கரை கோயில், வெண்ணெய் உருண்டை பாறை ஆகிய புராதன சின்னங்கள் பகுதியில் பயணிகள் கூட்டம் காணப்பட்டது. மேலும், கடலில் குளிக்க வேண்டாம் என கடலோர பாதுகாப்பு படை போலீசார் அறிவுறுத்தியும் ஆபத்தை உணராமல் பலர் கடலில் குளித்தனர்.

### வழக்கறிஞர் அருள்மொழி தலைமை! கலைஞர் நூற்றாண்டு விழா!

# மதுரையில் கழக சட்டத் துறை சார்பில் பேச்சுப்போட்டி!

### கழக சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

மதுரை, அக். 25 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட வழக்கறிஞர்களுக்கான 4வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறை இணைச் செயலாளர் அருளமொழி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை 22.10.2023 அன்று மதுரை குறிஞ்சி மகாலில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன்; துணைச் செயலாளர் பச்சையப்பன்; தலைமைக் கழக வழக்கறிஞர் சரவணன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவநேசன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு நடுவராக வழக்கறிஞர் நன்மாறன் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற சிவகங்கை நீதிமன்ற வழக்கறிஞர் சுமித்ராவுக்கு ரூபாய் 50,000 மற்றும் தங்கப் பதக்கம், சான்றிதழ்; இரண்டாம் பரிசு பெற்ற தேனி நீதிமன்ற வழக்கறிஞர் அற்புதராஜ்க்கு ரூபாய் 25,000 வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்; மூன்றாம் பரிசு பெற்ற மதுரை நீதிமன்ற வழக்கறிஞர் விஜயசாந்திக்கு ரூபாய் 15,000 தாமிரப் பதக்கம், சான்றிதழ்; ஆறுதல் பரிசு பெற்ற மதுரை நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஷர்மிளாவுக்கும், சுபலக்ஷ்மிக்கும் தலா ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழும் மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இப்பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற வழக்கறிஞர்கள் டிசம்பர் 6 அன்று சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில்

# நீட் தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரி கையெழுத்து இயக்கம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்! டாக்டர் அ.சுபேர்கான், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை பங்கேற்பு!

புதுக்கோட்டை, அக் 25-

புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணிகளின் சார்பில் நீட் தேர்விலிருந்து விலக்களிக்க க்கோரி ஐம்பது லட்சம் நபர்கள் கையெழுத்து இயக்கம் தொடக்க விழா நிகழ்ச்சி புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் தமிழக சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்.

தலைமைக் கழகத்தின் சார்பில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில தலைவர் டாக்டர் அ.சுபேர்கான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் கழக மருத்துவ அணி மாநில துணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், மாவட்ட பொருளாளர் ஜெ.அபுதாகீர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.ஆர். கே.கலைமணி, எஸ்.ஜெயராமன், பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி.பழனியப்பன், கே.எம்.சுப்பிரமணியன், ஆர்.வி.செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் உதயம் சண்முகம், வே.பொன்துரை, சக்தி ராமசாமி, பொன், கணேசன், டி.தங்கமணி, அ அடைக்கலமணி, அ.முத்து, அரு.வடிவேல், எஸ்.எம்.சீனியார், கே.எஸ். ரவி, குமார்(எ) துரைக்கண்ணு, ஆறு.சிதம்பரம், ஆர்.கணேசன், அறந்தாங்கி நகர செயலாளர் க.ராஜேந்திரன், கே.சி.சிவக்குமார்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் த.மணிராஜன், கலைச்செல்வன், டாக்டர் சுதர்சன், பாத்திமா பீவி, ரம்யா பாலு, மணிகண்டன், கே.ஆர்.ராமசாமி, சர்வேயர் மா.நடேசன், சிவ.பால இளங்கோ, தி.முத்து, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், இ.ஏ.பெரியகருப்பன், கண்ணன், நசுருதீன். இரா.தமிழ்ராசு, அருண்குமார், கவிக்குமார், முகம்மது ரபீக், இளையராஜா, அ.பழனியப்பன், சுப.செல்வம், முல்லை ரமேஷ், கே.வி. எஸ்.ஏ.மோகன், பாரதிராஜா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த நிகழ்வில் காணொளி காட்சி மூலம் சென்னையிலிருந்து கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற நீட் விலக்கு நம் இலக்கு என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கம் காணொளி காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட தி.மு.க. இளைஞர் அணி மற்றும் பல்வேறு அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசிய பேச்சை ஆர்வத்துடன் பார்த்துவிட்டு பின்னர் நீட்டுக்கு எதிராக தபால் அட்டையில் கையெழுத்திட்டு பெட்டியில் போட்டனர்.

### தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவ அணி

# துணை அமைப்பாளர் மருத்துவர் ஆர்.சதீஷ் மணவிழா!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி- துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வாழ்த்துரை!

தஞ்சாவூர், அக்.25-

தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவ அணியின் துணை அமைப்பாளர் மருத்துவர் சதிஷ் திருமணத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

வருகின்ற 27.10.2013 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணிக்கு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. மருத்துவர் அணியில் துணை அமைப்பாளரும், பி.ரெங்கநாதன் டெய்சி ராணி இவர்களின் மகனுமான மருத்துவர் ஆர். சதிஷ்க்கும், ஒரத்தநாடு எஸ்.கோவிந்தராஜ் செந் தமிழ்ச்செல்வி தம்பதியரின் மகள் ஜி.பானுப்பிரியாவுக்கும் தஞ்சாவூர் காவேரி டீலக்ஸ் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற உள்ளது.

இத்திருமண விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ். பழநிமாணிக்கம், எல்.கணேசன், மருத்துவ அணி மாநில செயலாளர் மரு.எழிலன் நாகநாதன், மருத்துவ அணி தலைவர் கனிமொழி என். வி.என்.சோமு, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., தஞ்சை மாநகரக் கழக செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் துணை மேயர் அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், எம்.இராமசந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, மாநில நிர்வாகிகள், சி.இறைவன், த.காரல் மார்க்ஸ், எஸ்.ஜித்து, கு.பரசுராமன், மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, எஸ்.என்.மணிமாறன், அ. புண்ணியமூர்த்தி, கனக வள்ளி பாலாஜி மற்றும் ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மருத்துவ அணி நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

### தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி,மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில்

# ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக் கோரி கையெழுத்து இயக்கம்!

### தடங்கம் சுப்ரமணி - கொளத்தூர் மணி துவக்கி வைத்தனர்!

தருமபுரி, அக். 25-

தருமபுரி கிழக்கு மாவட்டம் இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி கையெழுத்து இயக்கம் மாவட்டக் கழக அலுவலகத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

நிகழ்விற்கு தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் சுப்ரமணி தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக திராவிடர் விடுதலை கழக தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு ஏழை, எளிய குடும்பத்தில் இருந்து மருத்தவ கனவோடு வரும் மாணவ, மாணவியரை பாதிக்கும் நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும் என்று பேசினார்.

இதனை தொடர்ந்து கூட்டத்திற்கு வந்திருந்த ஏராளமான மாணவ, மாணவியர் கையெழுத்து இயக்கத்தில் அஞ்சல் அட்டைகளை பூர்த்தி செய்து பெட்டியில் செலுத்தினர்.

கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ். வெங்கடேஸ்வரன், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன், மருத்துவ அணி மாவட்ட அமைப்பாளர் பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ரேணுகா தேவி,உமாசங்கர், ஆறுமுகம், தலைமைச்செயற்குழு உறுப்பினர் எம்.ஜி.சேகர், வழக்கறிஞர். அசோக்குமார், கலைச்செல்வன், செல்வராஜ், ராஜகோபால், கார்த்திக், முத்தமிழன்,டி.பி.எஸ்.இளையசங்கர், பொன்.மகேஸ்வரன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில விளையாட்டு மேம்பாட்டு துணைச் செயலாளருமான டாக்டர். பொன். கௌதமசிகாமணி விழுப்புரம் மாம்பழப்பட்டு ரோடு, 25வது வார்டு முன்னாள் தி.மு.க. பிரதிநிதி எம்.குள்ளராஜ் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, நகர பொருளாளர் இளங்கோ, மாவட்ட அணி நிர்வாகிகள் தொண்டர் அணி கபாலி, அமரஜி, மாணவர் அணி ஸ்ரீ வினோத், அமைப்புசாரா ஓட்டுநர் அணி பாலு கார்த்தி, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன்,நட. ஆனந்த், தொழிலாளர் அணி சுரேஷ் பாபு, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, ஆதிதிராவிடர் நலக் குழு அணி செல்வ பிரேம், விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர்.பி.பரத், இளைஞர் அணி செ.மணிகண்டன், சங்கர், வழக்கறிஞர் காளிதாஸ், கே.ஆர்.பி.பிரவின், கோகுல் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

### பெரு முதலாளிகளுக்கு மோடி அரசு தள்ளுபடி செய்த

# வாராக்கடன் ரூ.14 லட்சம் கோடியா? ரூ.25 லட்சம் கோடியா?

### ஒன்றிய இணை அமைச்சர் அளித்த பதில் உண்மையா? ரிசர்வ் வங்கி அளித்த பதில் உண்மையா?

**பெரு முதலாளிகளுக்கு மோடி அரசு தள்ளுபடி செய்தது ரூ.14 லட்சம் கோடி இல்லை. மோடி அரசு பெரு முதலாளிகளுக்கு தள்ளுபடி செய்தது ரூ.25 லட்சம் கோடி என ஆர்.டி.ஐ. எனப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் ஒரு அதிர்ச்சி தகவல் வீடியோ பதிவு மூலம் சமூக வலை தளங்களில் பரவி வருகிறது.**

அந்த வீடியோ பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஆர்.டி.ஐ. என்று அழைக்கக்கூடிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது.

வங்கிகள் பெருமுதலாளிகளுக்கு வாராக்கடன் அளித்தது ரூ.14 லட்சம் கோடியா அல்லது ரூ.25 லட்சம் கோடியா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

**கனிமொழி கருணாநிதி எம்.பி.**
**மக்களவையில் கேள்வி!**

கடந்த மழைக்கால கூட்டத் தொடரில் தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள், வங்கிகளின் வாராக் கடன் தொடர்பான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நிதி துறை இணை அமைச்சர் பகவத் காரத் 2014ஆம் ஆண்டிலிருந்து 2022 - 2023ஆம் நிதியாண்டு வரை 14,56,226 கோடி ரூபாய் வாராக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.




இந்த தகவலை ஒப்பிட்டு ஆர்.டி.ஐ. மூலமாக, உண்மையில் கடந்த 9 ஆண்டுகளில் வாராக்கடன் தள்ளுபடி எவ்வளவு என்று ரிசர்வ் வங்கிக்கு குஜராத்தைச் சேர்ந்த சஞ்சய் என்பவர் மனு அளித்திருந்தார்.

அந்த மனுவுக்கு அளித்த பதிலில், கடந்த 9 ஆண்டுகளில் 25 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வாராக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்திருக்கிறது.

**நாடாளுமன்ற மக்களவையில், கேள்வி எண். 2983 என்ற தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நிதித்துறை இணை அமைச்சர் பகவத் காரத் அளித்த பதில் உண்மையா? ரிசர்வ் வங்கி அளித்த பதில் உண்மையா? என்ற அதிர்ச்சி சந்தேகம் நாடு முழுவதும் எழுந்திருக்கிறது.**

இரண்டு தகவல்களுக்குமிடையே இருப்பது ரூ.1கோடி, ரூ.2 கோடி, ரூ.100 கோடி, ரூ.200 கோடியல்ல; 10 லட்சம் கோடி ரூபாய் வித்தியாசம் இருக்கிறது.

பெரு முதலாளிகளுக்கு வாராக் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை அரசாங்கத்தின் இரண்டு அமைப்புகள் அளிப்பதிலே இவ்வளவு முரண்பாடுகள் ஏன் என்ற கேள்விதான் இப்பொழுது அனைவருக்கும் எழுந்துள்ள ஒரு கேள்வி.

சிறு - குறு - நடுத்தர தொழிலதிபர்கள் வங்கிகளில் கடன் கேட்டால் அவர்களது சொத்துக்களை பிணையப் பத்திரமாக வைத்து, ஆயிரத்தெட்டு கையெழுத்துகளை கேட்டு, கடன்களுக்காக அலைகழிக்கப்படுவதும், அவர்கள் கடன் தொகைகளை செலுத்தவில்லை என்றால் அவர்களது சொத்துகளை ஜப்தி செய்வதும் தொடர் கதையாகிக் கொண்டிருக்கிறது.

சாதாரண விவசாயிகள் டிராக்டர் கடனுக்காக விண்ணப்பித்தால் அவர்களது இல்லங்களுக்கே சென்று அவர்களை அவமானப்படுத்தும் கதையும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பெரு முதலாளிகளுக்கு ரூ.25 லட்சம் கோடி வாராக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது அனைத்து மக்களிடமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அந்த வீடியோ பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'நீட்' விலக்கை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து இயக்கம்!



புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணிகளின் சார்பில் நீட் தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரி ஐம்பது லட்சம் நபர்கள் கையெழுத்து இயக்கம் தொடக்க விழா நிகழ்ச்சி புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் – சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில தலைவர் டாக்டர் அ.சுபேர்கான், கழக மருத்துவ அணி மாநில துணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, அ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, அடைக்கலம், ஜெ.அபுதாகீர், ஆர்.ஆர்.கே.கலைமணி, எஸ்.ஜெயராமன், பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி.பழனியப்பன், கே.எம்.சுப்பிரமணியன், ஆர்.வி.செல்வம், உதயம் சண்முகம், வே.பொன்துரை, சக்தி ராமசாமி, பொன், கணேசன், டி.தங்கமணி, அ.அடைக்கலமணி, அ.முத்து, அரு.வடிவேல், எஸ்.எம்.சீனியார், கே.எஸ்.ரவி, குமார் (எ) துரைக்கண்ணு, ஆறு.சிதம்பரம், ஆர்.கணேசன், க.ராஜேந்திரன், கே.சி.சிவக்குமார், த.மணிராஜன், கலைச்செல்வன், டாக்டர் சுதர்சன் மற்றும் பலர் உள்ளனர்,




தஞ்சாவூர் மாவட்டம் தீர்க்க சுமங்கலி மஹாலில் மாநில மகளிர் ஆணையத்தின் சார்பாக பெண்களுக்கான இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவி ஏ.எஸ்.குமாரி, மாவட்ட ஆட்சித்தலைவர் .தீபக் ஜேக்கப் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆசிஷ் ராவத், தேசிய இணைய பாதுகாப்பு ஆராய்ச்சி கவுன்சிலிங் இயக்குநர் டாக்டர். காளிராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்ட சமூக நல அலுவலர் அனுரா பூர்னா, நடராஜமணி, தேசிய இணைய பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு மண்டல இயக்குநர் கார்த்திக் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி கையெழுத்து இயக்கத்தை மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட நிர்வாகிகள். ஜி.கே.சுபரசு, மு.கார்த்திகேயன், ஜி.குமரவேல், மஞ்சுளா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள். சி.ராஜேந்திரன். கே.டி.மணி, தாமரைக் கண்ணன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் இரா. தமிழரசன், மாநகர கழக நிர்வாகிகள் பா.ரகுபதி. கே.ஆர்.முருகன். வி.கணேசன், ஜே. தினகரன், கோமதி, ஏ.எஸ்.சரவணன். கே.டி. ஆர்.தனசேகரன், கேபிள் ராஜா, பன்னீர்செல்வம், ஜெயக்குமார், சி.பிரகாஷ், சாந்தமூர்த்தி, கே.ஜெய்.ஆர்.பி.முருகன், டி.மோகன் மற்றும் இளைஞரணியைச் சேர்ந்த அருண் பிரசன்னா, கேபிள் சரவணன், மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நீட் தேர்வில் இருந்து மாணவர்களை காக்க, 'நீட் விலக்கு நம் இலக்கு' என்ற கையெழுத்து இயக்கத்தினை தி.மு.க. இளைஞர் அணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் 50 நாட்கள் 50 லட்சம் கையெழுத்து இயக்கத்தில் பங்கேற்பது துவங்கியது. கரூரில் நடைபெற்ற விழாவில், அஞ்சல் அட்டைகளை பெட்டியில் அளித்தனர். தலைமைக் கழகப் பேச்சாளர் மதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், முனைவர் ஜான், மாவட்ட நிர்வாகிகள் ராஜேந்திரன், மகேஷ்வரி, பூவை.ரமேஷ்பாபு, எம்.எஸ்.கருணாநிதி, மாநகர செயலாளர் கனகராஜ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சரவணமூர்த்தி, மருத்துவர் அணி செயலாளர் ரமேஷ், இளைஞர் அணி சக்திவேல், மற்றும் ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் உள்ளனர்.



அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியத்தில் சாலை அமைக்கும் பணியை சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஏ. விஜயகுமார், தமிழ்ச்செல்வன், ஏ.ஏ.ஆறுமுகம், ஹேமலதா, புவனேஸ்வரி செந்தில்குமார், ராயப்பன், முத்து, ஹரி காந்திமதி, சின்னச்சாமி மகாலட்சுமி, பழனிவேல், பாரதி ஜெயக்குமார், சாந்தி பெருமாள், சிந்தாமணி கஜேந்திரன், சத்யா ,சாந்தி ராஜேந்திரன், சுப்பிரமணி, நாகராஜ் , ஏழுமலை, காசிலிங்கம், சுமதி சக்திவேல், செல்வராணி ஆறுமுகம், செல்வ சூர்யா சேதுபதி, மணியம்மாள் பிரபாகரன், புவனேஸ்வரி பிரபாகரன், சத்யராஜ், மாரப்பன் பழனிச்சாமி, வெங்கட், வரதராஜ், மகாலிங்கம், ராமராஜ் , வெங்கடேஷ், சுரேஷ் , மணி, காந்திமதி உள்பட அப்பகுதி கிராம மக்கள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற நீட் தேர்வு விலக்கு கையெழுத்து இயக்கத்தை சாஸ்திரி சாலையில் உள்ள கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அலுவலகத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளரும் மாநகராட்சி மேயருமான அன்பழகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர் . இந்த நிகழ்ச்சியில் மாநில மாணவரணி துணை அமைப்பாளர் பி.எம்.ஆனந்த், மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர்.கண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மண்டல குழு தலைவர்கள், விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ் , டோல்கேட் சுப்பிரமணி, அவைத் தலைவர் பேரூர் தர்மலிங்கம், சேர்மன் துரைராஜ், கவுன்சிலர்கள் காஜாமலை விஜி, முத்துச்செல்வம், கலைச்செல்வி, கிராப்பட்டி செல்வம், பகுதி செயலாளர்கள் மோகன் தாஸ், கமால் முஸ்தபா நாகராஜன், கனகராஜ்,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பி.ஆர்.சிங்காரம், தில்லை நகர் கண்ணன், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள், புத்தூர் தர்மராஜ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், கவுன்சிலர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் கே.என்.நேரு - அர.சக்கரபாணி துவக்கி வைத்தனர்!

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் - ஓசூரில் பல்வேறு திட்டப்பணிகள்!

## மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, அக் 25 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, மோரனப்பள்ளியில், ரூ.30 கோடி மதிப்பில் ஓசூர் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகள், ரூ.3 கோடியே 98 இலட்சம் மதிப்பில் ஓசூரில் புதிய மீன் மார்க்கெட் கட்டுமான பணிகளை துவக்கி வைத்தும்,

காமராஜ் காலனியில் ரூ.2 கோடியே 50 இலட்சம் மதிப்பில் புதிய நூலகம் மற்றும் அறிவுசார் மையம், ஓசூர் மாநகராட்சி, பழைய நகராட்சி கட்டிட வளாகத்தில் ரூ.19 கோடியே 50 இலட்சம் மதிப்பில் புதிய வணிக வளாகம், ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். மார்க்கெட்டில் ரூ.5 கோடியே 88 இலட்சம் மதிப்பில் வணிக வளாக கட்டுமான பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர், நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சிவராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் ,

ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, நாடாளுமன்ற உறுப்பினர் அ.செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வு செய்தார்கள்.

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு ஏழை எளிய மக்கள், பள்ளி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், விவசாயிகள், பெண்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 500 க்கும் மேற்பட்ட பேரூராட்சிகள், 120 க்கும் மேற்பட்ட நகராட்சிகள், 21 மாநகராட்சிகள், அனைத்து நகரப்பகுதிகளும் சீரான வளர்ச்சி அடைய பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தென்னிந்தியாவின் மான்ஸ்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவையைப் போன்று ஓசூர் மாநகராட்சியும் வளர்ச்சி பெற்று வருகிறது. சிப்காட் 1 முதல் 5 வரை பல்வேறு தொழிற்சாலைகள் இப்பகுதியில் அமைக்கப்பட்டு பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதற்கு காரணம் அடிப்படையில் பணியாற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2006 ஆம் ஆண்டு உள்ளாட்சி துறை அமைச்சராக இருந்த போது ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் ரூ.1200 கோடி மதிப்பில் கிருஷ்ணகிரி, தர்மபுரி பகுதியில் கொண்டுவரப்பட்டது. மேலும், 305 எம்எல்டி குடிநீர் கிடைக்கும் வகையில் 2வது ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்ட பணிகள் ரூ.8 ஆயிரம் கோடி மதிப்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் உள்ள அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சி முழுவதும் பயனடையும். மேலும் ஓசூர் மாநகராட்சிக்கு ரூ.550 கோடி மதிப்பில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் விரைவில் துவங்கபட உள்ளது.

இதனை தொடர்ந்து, ஓசூர் மாநகராட்சி, பழைய நகராட்சி கட்டிட வளாகத்தில் மூலதன மானிய நிதி திட்டம் 2021 22 ன் கீழ், ஏ பிளாக், பி பிளாக் மற்றும் சிபிளாக் என மூன்று பிளாக்கிற்கு தலா ரூ.6 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.19 கோடியே 50 இலட்சம் மதிப்பில் புதிய வணிக வளாகம் கட்டுமான பணிகள் ஆய்வு செய்யப்பட்டது.

பின்பு ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். மார்க்கெட்டில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.2 கோடியே 94 இலட்சமும், மாநகராட்சி பங்களிப்பு நிதி ரூ.2 கோடியே 94 இலட்சம் என மொத்தம் ரூ.5 கோடியே 88 இலட்சம் மதிப்பில் 12,500 ச.மீ பரப்பளவில் வணிக வளாக கட்டுமான பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. இந்த வணிக வளாகத்தில் 8 பிளாக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. 1380.24 ச.மீ பரப்பளவு கடைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஓசூர் மாநகராட்சியின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு சாலை வசதி, மின்சார வசதி, மேலும் அடிப்படை வசதிகள், 4 மண்டல அலுவலகங்கள் கட்டுமான பணிகளுக்கு ரூ. 12 கோடியும், மண்சாலைகளை தார் சாலைகளாக மாற்ற ரூ21 கோடியும். பழுதடைந்த தார் சாலைகளை புனரமைக்க ரூ. 22 கோடியும், மழை நீர் வடிகால் கால்வாய் அமைக்க ரூ.45 கோடியும் ஒதுக்கீடு செய்ய மாநகராட்சி மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். அக்கோரிக்கைகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

முன்னதாக, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆகியோர் ஓசூர் மாநகராட்சியில் ரூ.550 கோடி மதிப்பில் விரைவில் துவங்கவுள்ள பாதாள சாக்கடை திட்டப் பணிகள், குடிநீர் விநியோக திட்ட பணிகள், அடிப்படை வசதிகள் குறித்து மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் சினேகா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தையா, மண்டல குழு தலைவர்கள் ரவி, என்.எஸ்.மாதேஸ்வரன்,

மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ் , பொருளாளர் சுகுமாரன் , புஷ்பா சர்வேஷ் , சின்னசாமி, வீரா ரெட்டி, எல்லோரா மணி. கிரீஸ், ஜெயராமன். அருணா பூசன் . அப்துல் கலாம். ஒன்றிய செயலாளர்கள் சீனிவாசலு ரெட்டி, திவாகர். ரகுநாத், நாகேஷ், சின்ராஜ். பாக்கியராஜ் கஜேந்திர மூர்த்தி, ராஜா, கருணாகரன், ஸ்ரீதர். பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன். தஷ்தகீர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், இந்நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### என்.சந்திரன் முன்னிலையில்

# 167வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## ஜெ.நடராஜன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, அக். 25 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்குப் பகுதி, 167வது வட்ட பாக முகவர்கள் கூட்டம் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் முன்னிலையில் வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான, தா.மோ. அன்பரசன் அறிவுறுத்தலின் படி, ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளரும், 12-வது மண்டல குழு தலைவருமான, என்.சந்திரன் முன்னிலையில், 167-வது வட்ட கழக செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில், 22.10.2023 அன்று நங்கநல்லூர் 44-வது தெருவில் உள்ள ராஜ்குமார் சுலோக்சனா பள்ளியில் பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோடீஸ்வரன் சிறப்புரையாற்றினார். இதில் 167-வது வார்டு மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன், பாகம் 355 மற்றும் பாகம் 356 ஆகிய பாகத்தை சேர்ந்த உறுப்பினர்கள், நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வழிகாட்டுதலின் படி மயிலாடுதுறை நகரத்தில் நடைபெற்ற வார்டு பாகநிலை முகவர்கள் மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.ஏ.2., பி.எல்.சி. ) பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளர், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஜித்து (எ) ராஜரத்தினம் உரையாற்றினார். உடன் நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், கழக விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், பன்னீர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் வின்செட், நகர நிர்வாகிகள் ஆர்.கே.சங்கர், வை.தெய்வநாயகம், நடராஜன், மலைக்கோயில் எம்.பிரபாகரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் தீபாசத்தியேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

# மத அடையாள தேசம்: உருவாகிவிட்ட யூத இஸ்ரேலும் - இந்துத்துவம் உருவாக்க விரும்பும் இந்து இந்தியாவும்!

## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

**அறுபதுகள், எழுபதுகளில் கோடை விடுமுறை என்றால் ‘டென் கமாண்ட்மெண்ட்ஸ்’ (Ten Commandments, 1956) படத்தை திரையரங்குகளில் திரையிடுவார்கள். பள்ளி மாணவர்களை பெற்றோர் கூட்டிச் செல்வார்கள் என்பதால். எகிப்தில் அடிமைகளாக இருந்த யூதர்களை மோசஸ் கடவுளின் துணையுடன் விடுவித்து அவர்களுக்கு கடவுளால் வாக்களிக்கப்பட்ட நிலமான இஸ்ரேலுக்கு கூட்டிச் செல்வதுதான் கதை. மோசஸ் குழந்தையாக ஆற்றில் விடப்பட்டு எகிப்து இளவரசியால் கண்டெடுக்கப்பட்டு, அரச குடும்பத்தில் வளர்வார், கர்ணனைப் போல. பின்னர் உண்மை வெளிப்பட்டு, நாட்டைவிட்டு துரத்தப்படுவார். அலைந்து திரிந்து சினாய் மலையில் ஏறி கடவுளின் குரலைக் கேட்பார். கடவுள் கட்டளைப்படி எகிப்து சென்று மன்னருடன் வாதாடி, பலவித உற்பாதங்களைத் தோற்றுவித்து, பெருந்திரளான அடிமைகளுடன் வெளியேறுவார். அவர்கள் செங்கடலை நெருங்கும்போது மன்னனின் படைகள் துரத்திக்கொண்டு வரும். மோசஸ் கோலை உயர்த்த செங்கடல் இரண்டாகப் பிரிந்து வழிவிடும். இந்தக் காட்சிக்கு அரங்கில் பெரும் கரவொலி எழும்பும். அந்தக் கடல் பிரிந்து கொடுத்த வழியில் யூதர்கள் கடந்து அக்கரை சென்ற பின், துரத்திக்கொண்டு வரும் மன்னனின் படைகள் அதில் இறங்கியவுடன் கடல் மூடிக்கொண்டு அவர்களை மூழ்கடித்துவிடும். இப்படியாகத் தப்பி வந்த மக்களுக்கு மோசஸ் மூலமாக பத்து கட்டளைகளை கடவுள் கொடுப்பார். அதன்படி வாழ்ந்தால் அவர்**




**களுக்கு வாழ்வதற்கு ஒரு நிலத்தைத் தருவதாகக் கூறுவார். அப்படி வாக்களிக்கப்பட்ட நிலம், Promised land என்பதுதான் இஸ்ரேல் என்று இப்போது அழைக்கப்படும் பாலஸ்தீனம் என்பது புராணம், நம்பிக்கை.**

யூதர்களின் டோரா, பைபிள் உள்ளிட்ட மத நூல்களில் குறிப்பிடப்படும் இந்த கதைக்கு வரலாற்று ஆதாரம் எதுவும் கிடையாது. கிடைத்துள்ள வரலாற்று ஆதாரங்களின்படி சிந்தித்தால் அப்படியெல்லாம் நடந்திருக்கும் சாத்தியம் அதிகமாக இல்லை. ஆனால், ஏசு கிறிஸ்து பிறந்த நேரத்தில், கிறிஸ்துவ மதம் தோன்றிய நேரத்தில் யூதர்கள் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தார்கள் என்பது உண்மை. கிறிஸ்து பிறப்புக்கு பிறகான நானூறு, ஐந்நூறு ஆண்டுக் காலத்தில் அவர்கள் அங்கிருந்து வெளியேறி ஐரோப்பா முழுவதும் பரவி பல்வேறு நாடுகளில் வசிக்கத் தொடங்கினார்கள். பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அரேபியர்கள் பெருமளவு இஸ்லாமிய மதத்தை தழுவினார்கள்.

பொது ஆண்டு 500 முதல் பொது ஆண்டு 1900 வரை பல்வேறு நாடுகளில் வாழ்ந்த யூதர்கள் பாலஸ்தீனம்தான் சொந்த ஊர் என்று எண்ணி வந்தார்கள் என்று கிடையாது. அவர்கள் குடியேறிய நாடுகளில் வர்த்தகம் செய்தும், வட்டித் தொழில், வங்கித்தொழில் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டும் வாழ்ந்தார்கள். ஆனால் இவர்களுக்கும், பொது சமூகத்துக்கும் இடைவெளியும், முரண்பாடுகளும் நிலவி வந்ததும், யூதர்களுக்கு எதிரான வன்முறை, சமூக விலக்கம், கட்டாய வெளியேற்றம் ஆகிய அவ்வப்போது நிகழ்ந்ததும் உண்மைதான். இதன் உச்சகட்டமாகத்தான் ஹிட்லரால் லட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்ட கொடூர சம்பவம் இரண்டாம் உலகப் போர் நேரத்தில் நிகழ்ந்தது.




### புராணத்தை வரலாற்றாக்கிய தீர்வு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே யூதர்களுக்கென ஒரு நாடு தேவை என்ற எண்ணம் உருவாகத் தோன்றியது. கடவுள் யெஹோவாவால் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி எனப்படும் இஸ்ரேல்/பாலஸ்தீனம்தான் அது என்ற சிந்தனையும் உருவானது. இந்த சிந்தனையால் பல்வேறு நாடுகளில் வசிக்கும் யூதர்களுக்கும் அவர்கள் பல தலைமுறைகளாக பார்த்தே இராத, நினைத்தே இராத பாலஸ்தீனம் அவர்களது சொந்த ஊர், உரிமையுள்ள நிலம் என்ற எண்ணம் உருவாகத் தொடங்கியது. இதன் உச்சமாகத்தான் இஸ்ரேல் என்ற நாடு இங்கிலாந்தால் உருவாக்கப்பட்டதும், உலகின் பல பகுதிகளிலிருந்தும் யூதர்களுக்கு அந்த நாட்டுக்கு “திரும்பி வரும் உரிமை” (Right to Return) வழங்கப்பட்டதும் நடந்தது. அதாவது எத்தனையோ தலைமுறைகளாக ஃபிரான்சிலோ, அமெரிக்காவிலோ வாழ்ந்து வரும் வம்சாவழியைச் சேர்ந்த யூதர் ஒருவர் இஸ்ரேலுக்குச் சென்று குடியேற நினைத்தால் அது திரும்பிச் செல்வதாக’க் கருதப்படும்.




**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*

இந்த முரண்பாட்டை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், இலங்கையின் மலையகத் தமிழர்களை யோசித்துப் பாருங்கள். அவர்கள் நூறு முதல் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தேயிலைத் தோட்ட த்தில் வேலை செய்ய தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்களின் வம்சாவழிகள்தான். அவர்கள் அனைவரும் தமிழ்நாட்டுக்கு ‘திரும்பி வரும் உரிமை’ கோர முடியுமா? சாஸ்திரிசிரிமாவோ 1964 ஒப்பந்தத்தின்படி திரும்ப வர ஏற்கப்பட்டவர்களிலேயே பலர் தமிழ்நாட்டுக்கு வந்த பின்னும் குடியுரிமை இல்லாமல் அவதிப்பட்ட கதை பேசப்பட வேண்டியது. இப்படி நன்றாக அறியப்பட்ட வரலாற்றில் இடம் பெயர்ந்தவர்களின் சந்ததியருக்கே திரும்பி வரும் உரிமை இல்லாதபோது, எத்தனையோ நூற்றாண்களுக்கு முன்னால் சென்றிருக்கலாம் என யூகி க்கப்படுபவர்களின் சந்ததியருக்கு ‘திரும்பி வரும் உரிமை’ வழங்குவது எவ்வளவு முரண்பாடானது.

### இஸ்ரேல் நாட்டினை எதிர்க்கும் சனாதன யூதர்கள்

**சனாதனம் என்றால் மாறாதது என்று பலரும் கூறுவதை சமீப காலங்களில் கேட்டுள்ளோம். அதனால் மாற்றங்களை விரும்பாதவரை சனாதனி என்று கூறுகிறோம். பொதுவாக இவர்கள் பிற்போக்காளர்களாக இருப்பார்கள். ஆனால், யூதர்கள் விஷயத்தில் ஒரு சுவாரஸ்யமான முரண் ஏற்படுகிறது. யூத மத நம்பிக்கையில் ஒரு பகுதி கடவுளின் கட்டளைகளை யூதர்கள் பின்பற்றாததால், அவர்களுக்குத் தருவதாகச் சொன்ன பூமி வழங்கப்படவில்லை என்பதாகும். அதனால் அவர்கள் பல்வேறு நாடுகளிலும் வாழ்வதுதான் சரியே தவிர, தங்களுக்கென ஒரு நாடு என இஸ்ரேலை உருவாக்கியதும், அந்த நிலத்திலிருந்து பாலஸ்தீனியர்களை அகற்றியதும் தவறு என்பது சனாதன யூதர்களில் ஒரு பிரிவினரின் கருத்து.**

யூதர்களின் சம்பிரதாயப்படி ஆண்கள் தாடி வளர்த்து கறுப்பு ஆடையும், கறுப்புத் தொப்பியும் அணிய வேண்டும். அவ்வாறு மத வழக்கத்தை தீவிரமாக பின்பற்றும் சனாதன யூதர்கள் இஸ்ரேலுக்கு எதிராக பதாகைகளை ஏந்தி நியூயார்க்கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை நான் பலமுறை கண்டுள்ளேன். நீங்களும் இங்கே இணைக்கப்பட்டுள்ள படத்தில் காணலாம். பல நேரம் இவர்கள் ‘JEWS AGAINST OCCUPATION’ என்ற பதாகையையும் பிடித்திருப்பர். அதாவது இஸ்ரேல் நாடு என்பது பாலஸ்தீனியர்களின் நிலத்தை ஆக்கிரமித்துள்ளது என்பதே பொருள். கீழேயுள்ள படத்தில் டோரா என்ற யூதர்களின் புனித நூல் பாலஸ்தீனம் முழுவதையும் பாலஸ்தீனியர்களின் இறையாண்மைக்கு விட்டுவிட வேண்டும் எனக் கூறுவதாக ஒரு பதாகையை ஏந்தியுள்ளதைக் காணலாம்.



**இந்தியாவில் சனாதனிகள் இப்போது மிகுந்த ஆவேசத்துடன் சனாதன எதிர்ப்பாளர்களைக் கண்டித்துப் பேசுகிறார்கள். சனாதனம் என்றால் அது வர்ணாசிரம தர்மம் அல்ல, தீண்டாமை அல்ல என்று சொல்கிறார்கள். அவர்களெல்லாம் இது போல “ஜாதி மறுப்பே சனாதனம்”, “வர்ண பேதம் கடவுளுக்கே அடுக்காது”, “உங்கள் ஜாதிக்குள் திருமணம் செய்யாதீர்கள்”, “ஜாதிக்குள் திருமணம் செய்ய கட்டாயப்படுத்துவது அதர்மம்”, “பார்ப்பனர்கள் யாருக்கும் உயர்ந்தவர்கள் அல்ல”, “சனாதனம் ஜாதீயத்தை எதிர்க்கிறது”, “தீண்டாமை என்பது கொடிய பாவம்” என்றெல்லாம் பதாகைகளைப் பிடித்துக்கொண்டு ஊர்வலம் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதுவும் விபூதி, திருமண் முதலிய சின்னங்களை நெற்றியில் அணிந்து, குடுமி வைத்தவர்கள் இப்படியெல்லாம் பதாகைகளை**



**ஏந்தி வந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என நினைத்துப் பார்க்க வேண்டும். ஆனால் அப்படியெல்லாம் இவர்கள் செய்வதில்லை. சனாதனம் என்றால் இதுதான், சனாதனம் என்றால் அதுதான் என்று வாயினால் பசப்புகிறார்களே தவிர, திட்டவட்டமாக களத்தில் இறங்கி ஜாதி மறுப்பு பிரச்சாரம் செய்வதில்லை. சனாதன யூதர்களைப் பாருங்கள். பாலஸ்தீனத்தை விடுவியுங்கள். பாலஸ் தீனியர்களிடம் இறையாண்மையைக் கொடுங்கள் என்று திட்டவட்டமாக கோருகிறார்கள்.**

### இந்துத்துவத்தின் புண்ணிய பூமி கருத்தாக்கம்

யூதர்களுக்கு கடவுள் வாக்களித்த பூமி இஸ்ரேல் என்று சொன்னதால் எப்படி தேசம் என்ற நவீன அரசியல் அடையாளம், மதத்துடன் பிணைந்து கொண்டதோ, அது போன்றதுதான் சாவர்க்கர் புண்ணிய பூமி என்ற கருத்தாக்கத்தை உருவாக்கியதும். உண்மையில் இந்துத்துவத்தின் சாராம்சமே அதுதான். அதன்படி யார் ஒருவரின் புண்ணிய தலங்கள் இந்திய எல்லைக்குள் இருக்கிறதோ அவர்தான் இந்தியர். முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியவர்களின் புண்ணிய தலங்கள் இந்தியாவுக்கு வெளியே இருப்பதால் அவர்கள் இந்தியாவின் முழுமையான குடிமக்கள் கிடையாது. இவ்வாறு நாட்டின் குடியுரிமையை மதம் என்பதுடன் பிணைப்பதுதான் மத அடையாள தேசியம் ஆகும். அரசாங்கம் அதிகாரபூர்வ மதமாக ஒரு மதத்தை ஏற்பது என்பது கூட பிரச்சினை கிடையாது. குடியுரிமையை, குடிநபரின் வரையறையை மதம் என்பதுடன் இணைப்பதுதான் கடுமையான பிரச்சினை. ஆங்கிலத்தில் தேசம் என்ற வார்த்தையை ‘நேஷன்’ என்று கூறுகிறோம். இதன் மூலச் சொல் லத்தீன் மொழியில் பிறப்பினை குறிப்பதாகும். ஒருவரின் பிறப்பு சார்ந்ததே அவரது தேசம் என்பது.

உதாரணமாக அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் என்பவர் இருக்கிறார். இவரின் தாயார் சியாமளா சென்னையில் பிறந்தவர். தந்தை ஜமைக்காவில் பிறந்தவர். ஆனால், கமலா அமெரிக்காவில் பிறந்ததால் அந்த நாட்டின் குடிநபர் ஆகிறார். அதனால்தான் அவர் தேர்தலில் போட்டியிட முடிகிறது. துணை அதிபராக முடிகிறது. அமெரிக்காவில் பல இந்து கோயில்களைக் கட்டியுள்ளார்கள். இந்து மதத்தினரும் அங்கே அதிபர் தேர்தலில் பங்கேற்கிறார்கள். இங்கிலாந்து நாட்டின் பிரதமராக ஒரு இந்து, ரிஷி சுனக் இருக்கிறார். அவர் காசியை புண்ணிய தலமாக நினைத்தால் அது குறித்து இங்கிலாந்தில் யாரும் கவலைப்படவில்லை. மதத்துக்கும் குடியுரிமைக்கும் இந்த நாடுகள் முடிச்சுப் போடவில்லை.

ஆனால் சாவர்க்கரின் இந்துத்துவம் முடிச்சுப் போடுகிறது. இந்தியாவை புண்ணிய பூமியாகக் கொள்ளாதவர்கள் இந்திய குடிமக்களாக இருக்க முடியாது என்ற கருத்தை அது விதைக்கிறது. இஸ்ரேலின் அடிப்படையான மோசஸ் கதைபோல சாவர்க்கர் ராமாயணத்தைப் பயன்படுத்துகிறார். ராமர்தான் இந்தியாவை ஒரே நாடாக இணைத்தவர் என்று கூறுகிறார். ராமாயணம் ஒரு புராணக்கதையாகும். ஆதாரபூர்வமாக நிறுவப்பட்ட வரலாறு அல்ல. மேலும் வால்மீகி ராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்கை என்பது மத்தியப் பிரதேசத்தில் இருப்பதாகக் கருதும் ஆய்வாளர்கள் பலர் இருக்கிறார்கள்.

**புராணத்தை வரலாறாக ஆக்குவதிலும், மதத்தை தேசமாக ஆக்குவதிலும் இஸ்ரேலின் முன்மாதிரிக்கும், இந்துத்துவ சிந்தனைக்கும் நிறைய ஒப்புமைகளைக் காணலாம். உள்ளபடி சொன்னால் குடியுரிமை சீர்திருத்தச் சட்டம் என்பது ஒருவகையில் இந்துக்களின் “திரும்ப வரும் உரிமை” எனலாம். பிற நாடுகளில் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் ஒருவர் இந்தியாவிடம் அடைக்கலம் கேட்டால் கொடுப்பதற்கான விதிமுறைகளை வகுக்காமல், இந்துக்களாக இருந்தால் குடியுரிமை வழங்கலாம், இஸ்லாமியர்கள் என்றால் முடியாது என்றெல்லாம் விதிமுறைகள் வகுப்பது குடியுரிமையையும், மதத்தையும் இணைக்கும் செயல் என்பதால்தான் போராட்டங்கள் வெடித்தன.**

இந்துத்துவ அணியினரின் வெளிப்படையான இஸ்ரேல் ஆதரவு என்பது, முஸ்லிம்களை பொது எதிரியாக காண்பதிலிருந்து, பலவகையான தொடர்பு புள்ளிகளைக் கொண்டது என்றே நினைக்கத் தோன்றுகிறது. இஸ்ரேல் மேலும் வலுப்பெறுவது இந்துத்துவர்களின் வேலை திட்டத்தை ஊக்கப்படுத்தவே செய்யும். ‘மதமே தேசம்! புராணமே வரலாறு’ என்ற முழக்கத்துக்கு இஸ்ரேல் மிகவும் அனுசரணையான சிறந்த முன்மாதிரியாகும்.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



திருச்சி பஞ்சப்பூரில் விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வரவுள்ள புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்று வரும் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க ஆலோசனைகள் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையாளர் வைத்தியநாதன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி நகரப் பொறியாளர் சிவபாதம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் தீரன் சின்னமலையின் படைத்தளபதி மாவீரன் பொல்லான் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் முழு உருவ சிலையுடன் கூடிய அரங்கம் அமைப்பது தொடர்பாக கலந்தாய்வுக் கூட்டம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஜவகர், மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் காசிலிங்கம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திராவிடப் போராளிகள் 40

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

ஓவியம் : ரவி பேலட்



## ‘கொடிக் கவிதை’ கனகம்மை!

‘சுயமரியாதைக்காரன், ஏகாதிபத்தியங்கள் அனைத்திற்கும் எதிரி! தோழர் கனகம்மையார் இராமசாமி முழக்கம்’ என்ற தலைப்போடு 20.10.1945 தேதியிட்ட ‘குடிஅரசு’ ஏட்டின் முதல் பக்கத்தில் வெளியான உரையை ஆற்றிய கனகம்மையார், நாம் அறிந்திராத திராவிடப் போராளிகளில் ஒருவர்.

கனகம்மையார் சிறந்த சுயமரியாதைச் சிந்தனையாளர். ஆழ்ந்த தமிழ்ப் பற்றும், சமூக அநீதிகளின் மேல் கோபமும் கொண்ட சமத்துவப் பார்வையும் அவரது தனிச்சிறப்பு. திராவிட இயக்கத் தலைவர்களால் மதிக்கப்பட்டவர். பேச்சிலும் எழுத்திலும் புதியதொரு வீச்சை வெளிப்படுத்திய கனகம்மையார் சுயமரியாதை மாநாடுகளில் உரையாற்றினார்.

அவரது உரைகளில் சமூக, பொருளாதார, அரசியல் செயல்பாடுகள் பற்றிய கருத்துகளை அஞ்சாமல் வெளிப்படுத்தினார். அவரது இலக்கிய ஈடுபாடும் அதை வெளிப்படுத்தும் தர்க்க அறிவும் வியப்புக்குரியது. அவரது வாழ்க்கைக் குறிப்புகளில் சில வரலாற்றுக் குறிப்புகளும் உள்ளன.

### தமிழருக்கு இராமாயணம் வேண்டாம்!

1944-ஆம் ஆண்டு ஜூலை 30-ஆம் தேதியன்று சென்னையில் தோழர் கே.கே.நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 5-வது சுயமரியாதை மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றியபோது தந்தை பெரியாரை ‘தமிழ்நாட்டுத் தனிப்பெருந் தலைவர்’ என்று குறிப்பிட்ட கனகம்மையார், இராமாயணம் பற்றி முன்வைத்த கருத்துகள் இன்றும் பொருந்துவன.

“வடநாட்டுக் காவியங்களும் புராணங்களும் தமிழ்நாட்டில் தோன்றிய பின்னர் தமிழ் நூல்கள் மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகின்றன. ஆதலால், இராமாயணம் எந்தவிதத்தாலும் தமிழரால் ஆதரிக்கத் தக்கதல்ல என்பதுதான் எனது கருத்து. நமக்குள்ளேயே போர்? ஆம்! இராமர் என்றைக்குத் தென்னாடு வந்தாரோ அன்றே சகோதரப் போர்கள் மூண்டன அல்லவா? வாலிக்கும் சுக்ரீவனுக்கும் போர் மூண்டது. வாலி மாண்டான். அதைப் போலவே தென்னிலங்கையில் இராவணனுக்கும் விபீஷணனுக்கும் விரோதம் மூண்டது. விபீஷணன் காட்டிக் கொடுத்தான். இராவணன் மாண்டான்.

ஒருக்கால் இராவணனும் இராமனும் ஆரியரே என்று விவாதத்திற்காக வைத்துக்கொண்டாலும் இராமாயணம் ஆரிய கதைதானே. அதையேன் தமிழர் பயபக்தியுடன் படித்துப் போற்ற வேண்டும். மேலும், ஆரிய மன்னனாகிய இராமரை நாம் ஏன் கடவுளாகக் கொள்ளவேண்டும்”.

### பிராமண துவேஷத்துக்கு மறுப்பு

திராவிட இயக்கத்தின்மீது பிராமண துவேஷம் என்ற அவதூறு இப்போதும் வீசப்படுகிறது. அதற்கு கனகம்மையார் அன்றே பதில் கூறியுள்ளார்.

“பிராமணர்கள் மீது நமக்கு எள்ளளவேணும் வெறுப்போ. துவேஷமோ கிடையாது. ஆனால், பிராமணியத்தின் கொடுமைகளைத் தொலைப்பதே நமது கருமமும் தருமமும் ஆகும். கொசு வலைக்குள் தூங்குவது எப்படிக் கொசுதுவேஷம் ஆகாதோ அதைப் போலவே அடிமைத்தனத்தை அகற்றுவது ஆரியத்துவேஷம் ஆகாது.

மனிதருக்குள் பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கும் வருணாசிரமதருமம் இருக்கும் வரையில் வகுப்பு துவேஷம் இருந்தே தீரும். ஒரு சாதி தீண்டப்படாதது. ஒரு சாதி பார்க்கப்படாதது. ஒரு சாதி தெய்வீகம் வாய்ந்தது. ஒரு சாதி ஆளப்பிறந்தது. ஒரு சாதி உழைக்கப் பிறந்தது என்றெல்லாம் கூறுகின்ற சாஸ்திரமும் அந்த சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்ற சமூகமும் இருக்கிற வரையிலும் வகுப்பு துவேஷம் இருந்தே தீரும் அல்லவா?

சாதி வேற்றுமை ஒழியவேண்டும் என்று நாம் கூறுகிறோம். எல்லோரும் சமத்துவமாக வாழ வேண்டும் என பிரச்சாரம் செய்கிறோம். ஹிட்லர் இனச் செருக்கால் அழிந்தான். யூதர்கள் தமது ஜாதித் திமிரால் ஜெர்மனியினின்றும் துரத்தப் பட்டார்கள். இனச்செருக்கும் ஜாதித் திமிரும் நாசத்திற்குக் காரணங்களாக முடிகின்றன. ஆதலால், இங்கே ஜாதிகள் வேண்டாம். இனச் செருக்கும் வேண்டாம் எனச் சொல்லுகிறோம். இது சாதித் துவேஷம் ஆகுமா? சிந்தித்துப் பாருங்கள்”.

### திராவிட இயக்கக் கொடிக் கவிதை

அதேபோல் இலக்கியத் திறன் வாய்ந்த கனகம்மையார் திராவிட இயக்கக் கொடி பற்றி இயற்றிய கவிதையும் ‘குடிஅரசு’ ஏட்டில் வெளியாகி உள்ளது.

**‘ஆடு கொடியே’!**

**ஆடு கொடியே-பறந்தாடு கொடியே-இனி**
**ஆரியம் ஒழிந்த தென்று ஆடு கொடியே.**
**நானிலத்தி லேமுதலில் நாகரீகத்தை-நிலை**
**நாட்டினான் தமிழன் என்று ஆடு கொடியே.**
**வானிலத்தி லேஎழுந்து ஆடு கொடியே-இனி**
**வாழ்வு உண்டு தாழ்விலையென்**
**றாடுகொடியே (ஆடு)**
**ஒன்றே குலமுமென ஆடு கொடியே-தனி**
**ஒருவனே தேவன் என்று ஆடு கொடியே.**
**நன்றாய்த் தெளிந்தோமென்று ஆடு**
**கொடியே-இனி**
**நமனுக்கும் அஞ்சோம் என்று ஆடு**
**கொடியே. (ஆடு)**
**கண்மூடிப் பழக்கமெனும்**
**காரியமெலாம்-நெடுங்**
**காலமாக வந்திருந்தும் தன்மதிப்பினால்**
**மண்மூடிப் போயினவென்**
**றாடுகொடியே-இவை**
**மறுபடியும் வாராவென்று ஆடு**
**கொடியே. (ஆடு)**
**இந்தியை ஒழிப்பதிலே ஈடுபட்டதில்-நிகர்**
**இல்லையென்றே தலைவராய்ப் புகழ்பரப்பிச்**
**செந்தமிழைக் காப்பதற்குச் சிறைபுகுந்த—**
**அவர்.**
**சிறப்பினைச் சொல்லிச் சொல்லி ஆடு**
**கொடியே. (ஆடு)”**

1945-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருச்சியில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் கொடியேற்றி வைத்து ‘இனி சுயமரியாதை இயக்கம் செய்ய வேண்டிய பணிகள்’ என அவர் பட்டியல் இட்டவைதான் இன்றுவரை நமது குறிக்கோள்களாக உள்ளன.

### தொண்டாற்றுவதே பேரானந்தம்!

“ஆலயங்கள் எல்லோருக்கும் பொதுவாகத் திறக்கப்படவேண்டும். கோயில்களில் ஜாதிக்கு ஒரு இடம் வகுக்கும் கொடுமை ஒழிய வேண்டும். எக்குலத்தவரும் கோயிலுக்குள் நேரே சென்று உருவத்தைக் கண்டோ அல்லது தொட்டோ வணங்கும் வழக்கம் அமலுக்கு வரவேண்டும். பிராமணருக்கு முன்னிடம் தந்து, பிராமணரல்லாதாருக்குப் பின்னிடம் கொடுத்து, ஆதித் திராவிடர்களுக்கு அதையும் மறுத்து வரும் இந்நாட்டு வழக்கம் விரைவில் ஒழியவேண்டும். தமிழ்நாட்டுக் கோயில்களில் ‘கடவுள் வணக்கம்’ தமிழில் நடத்தப்படவேண்டும்.

ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், ஆறுகள், குளங்கள், சத்திரங்கள் முதலிய பொது நிலையங்களில் ஜாதி வேற்றுமையை நினைப்பூட்டும் பாகுபாடுகளோ அல்லது ஜாதிப் பூசல்களை வளர்க்கும் தனி உரிமைகளோ சட்டப்பூர்வமாய் நீக்கப்படவேண்டும். பெண்களுக்கு தகப்பன் சொத்தில் சம உரிமை உண்டென்று சட்டம் செய்தல் வேண்டும். சம உரிமையும் சம வாய்ப்பும் பெண்களுக்கு வழங்குவது எந்நாளோ அந்நாளே இந்நாட்டின் பொன்நாள் ஆகும் என்பது எனது கருத்து. ஏழைகளே எமது தோழர்கள்; பாட்டாளிகளே நமக்கு கூட்டாளிகள்; தாழ்த்தப்பட்டோரே நமது சகோதரர்கள்; இவர்களுக்குத் தொண்டாற்றுதலே நமக்குப் பேரானந்தம்” என்று முழங்கிய கனகம்மையாரின் திராவிட இயக்கச் சிந்தனையும், அன்றைய சமூகச் செயல்பாடும் எத்தகைய எதிர்ப்புகளை ஏற்படுத்தி இருக்கும், என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்த திராவிட இயக்கப் போராளியின் கனவுகளை திராவிட இயக்கம் ஆட்சியிலும் சமுதாயத்திலும் செயல்படுத்தி வருகிறது.

(வருவார்கள்...)

### கல்வியாளர் கணவர்!

சேலம், திராவிட இயக்க வரலாற்றில் பல முதன்மையான நிகழ்வுகளைக் கண்ட நகரம். சேலத்துக்கு மேலும் சில சிறப்புகள் உண்டு. இந்தியாவிலேயே ஒரு நகராட்சியால் தொடங்கப்பட்ட முதல் கல்லூரி சேலம் அரசு ஆண்கள் கலைக்கல்லூரி. 1857-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுப், பல சாதனையாளர்களை உருவாக்கிய அந்தக் கல்லூரியின் முதல்வராக 1927 முதல் 1950 ஆகஸ்டு வரை 23 ஆண்டு காலம் பணியாற்றியவர் மிகச் சிறந்த கல்வியாளரான இராமசாமி அவர்கள்.

ஆங்கிலேயர் இருவர், பார்ப்பனர்கள் மூன்று பேர் அடுத்தடுத்து முதல்வர்களாகப் பணியாற்றிய அந்தக் கல்லூரியின் முதல் பார்ப்பனரல்லாத முதல்வர். M.A.LT படித்தவர். தீவிர வைணவர். கொங்கு வெள்ளாளக் கவுண்டர். சாதிப் பெயருடனே அறியப்பட்டவர். ஆனால் தந்தை பெரியாரின் சுயமரியாதை, சமதர்மக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர். அவரது அழைப்பின் பேரில், சேலம் அரசு கலைக்கல்லூரியில் தத்துவவியல் துறையில் பெரியார் அவர்கள் நிகழ்த்திய தனிப்பேருரை ஒன்று ‘தத்துவ விளக்கம்’ என்ற நூலாக வெளியிடப்பட்டது. இத்தகைய பெருமைக்குரிய இராமசாமி அவர்கள்தான் கனகம்மையார் அவர்களின் கணவர்.

1950-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் திடீரென்று இராமசாமி அவர்கள் மரணமடைந்தார். அவரது மறைவுக்கு ‘விடுதலை’ இதழில் தலையங்கம் எழுதப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘திராவிட நாடு’ ஏட்டில் உள்ளத்தை உருக்கும் இரங்கல் கட்டுரை ஒன்றை எழுதினார். அதன்பின் இரண்டு மகன்கள் ஒரு மகள் கொண்ட குடும்பப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார் கனகம்மையார்.

### பூசாரிப் பெண்கள்!

மனிதகுல வரலாற்றில் ஆதியில் பெண்களே பூசாரிகளாக விளங்கினர். இதற்கான வலுவான சான்றுகள் சிலப்பதிகாரத்திலும் சங்க இலக்கியத்திலும் உள்ளன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியில் கொற்றவையின் பூசாரி சாலினி ஆவாள்.

கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பாலை திணையில் கொற்றவைக் கோயில் அருகே இளைப்பாறினர். அங்குப் பூசை செய்ய வந்த சாலினி கண்ணகியைப் பார்த்து **“கொங்கமர் செல்வியே, குடமலை யாட்டியே, தென்தமிழ்ப் பாவையே, உலக மெல்லாம் போற்றும் திருமாமணியாக வருவாய்”** என வாக்குரைத்தாள். இன்றும் கிராமப்புறங்களில் அடித்தளப் பெண்கள் வாக்குரைப்பது சாலினி மரபின் தொடர்ச்சியாகும். ஆண் பூசாரிகளுக்கு முன்பு குறமகள்கள் (தேவராட்டிகள்) முருகனின் பூசாரிகளாக இருந்துள்ளதைத் திருமுருகாற்றுப்படை (228-249) கூறுகிறது. பின்னாளில்தான் முருகனுடைய பூசாரிகளாக வேலன்மார் வந்தனர்.

ஆதியில் வேலன்மார் முதன்முதலில் பூசாரியாகச் செயல்பட்ட போது அவர்கள் பெண் வேடமிட்டுப் பூசைகள் செய்தனர். அதன் பின்னர் மெல்ல மெல்ல பெண் வேடத்திலிருந்து விடுபட்டு, ஆண்களாகவே நின்று பூசைகள் செய்தனர். மனிதகுல வரலாற்றில் பூசாரியின் பரிணாமத்தைப் பேசுவதற்கு தமிழ் இலக்கியங்களே மிகச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

**-மானுடவியலாளர் முன்னாள் பேராசிரியர் பக்தவத்சல பாரதியின் ஃபேஸ்புக் பதிவு**

### ஃப்ளாஷ்பேக்



### கொடைக்கானலில் ‘சூரியன்’!



ஷேக் அம்சா

என் தந்தை கே.எம்.அம்சா அவர்கள் உதயசூரியன் சின்னத்தை நெஞ்சில் பச்சை குத்திக் கொண்டு கழகப் பணியாற்றியவர். 1990-ஆம் ஆண்டு கொடைக்கானலில் மலர் கண்காட்சியைத் திறந்து வைக்க தலைவர் கலைஞர் அவர்கள் மே மாதம் 20-ஆம் நாளன்று வருகை தந்தார். அப்போது கொடைக்கானல் நகர இலக்கிய அணித் தலைவராக இருந்த என் தந்தை, தலைவருக்கு சால்வை அணிவித்து வரவேற்றார். உடன், சட்டமன்ற உறுப்பினர் எல்.மூக்கையா அவர்கள்.

**-ஷேக் அம்சா, வண்டன்மேடு, கேரளா.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

#### கண்ணியமான போராட்டங்கள்!

**1958-ஆம் ஆண்டு மார்ச் 8 மற்றும் 9 தேதிகளில், மதுரை மாவட்ட தி.மு.க.வின் மூன்றாவது மாநாடு பழனியில் நடை பெற்றது. அந்த மாநாட்டில் ‘போராட்டம்’ என்கிற தலைப்பில், சத்தியவாணி முத்து அம்மையார் உரையாற்றினார். “நாம் நடத்தும் அறப்போராட்டங்களைப் போல அமைதியான முறையிலும், கண்ணியமான முறையிலும் போராட்டத்தை நடத்துபவர்கள் இந்தியாவிலேயே யாரையும் காட்ட முடியாது. இதற்குக் காரணமான நம் அண்ணாவை தலைவராகக் கொண்டதற்கு நாம் மிகவும் பெருமை அடைகிறோம்” என்று குறிப்பிட்டார்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 280




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131